பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

உதயன்

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 30 வியாழக்கிழமை (16.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 323

இலங்கை இனப்பிரச்சினையை இராணுவ வெற்றி தீர்க்காது!

இந்தியப் பிரதமர் மன்மோகன் வலியுறுத்து

புதுடில்லி,ஒக்ரோபர்16

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையை இராணுவ வெற்றி ஒரு போதும் முடிவுக்குக் கொண்டுவராது.

இவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

இலங்கையில் நிலவும் சூழ்நிலை இந்திய அரசுக்கு மிகவும் கவலை அளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் உச்சி மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் முடிவில் செய்தியாளர்களுக்கு பிரதமர் மன்மோகன் நேற்றுப் பேட்டி அளித்தார். அப்போதே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்.

அவர் அப்போது தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கமும் தமிழ்ப் போராளிகளும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ வெற்றி தீர்வாகாது. இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்கு உட்பட்டு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்றும் இந்தியா எப்போதும் நம்புகிறது. அதே நேரத்தில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியத் தூதுவர் ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக். 16

கொழும்புக்கான இந்தியத்தூதுவர் அலோக் பிரசாத் நேற்று எதிர்க்கட்சித்

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே →

க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள் ஆங்கிலம் பகுதி (I - II)

தமிழகத்திலிருந்து வெளிவரும் ஜனியர் விகடன் சஞ்சிகைக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் வழங்கிய பேட்டி

11 ஆம் பக்கத்தில் →

தமிழகத்திலிருந்து வரும் அழுத்தங்களுக்கு இலங்கை அரசு அடிபணிய மாட்டாது!

இராணுவ நடவடிக்கை தொடரும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஒக். 16

தமிழகத்திலிருந்து விடுக்கப்படும் எந்த அழுத்தங்களாலும் இலங்கையில் மேற் கொண்டுவரும் இராணுவ நடவடிக்கை களை இடைநிறுத்தப் போவதில்லை என இலங்கை அரசு அறிவித்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இது குறித்து தெரிவித்தவை வருமாறு:-

(16 ஆம் பக்கம் பார்க்க)

ம.தி.மு.கவின் எம்.பிக்கள் இருவர் உடனடியாகப் பதவி விலகுவர்

வைகோ தகவல்

சென்னை,ஒக்.16

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் இருவார காலத்துக்குள் போர் நிறுத்தம் மேற்கொள்ளப் படா விட்டால், மறுமலர்ச்சி தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் உடனடியாகவே பதவி விலகுவார்கள்.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ இதனைத் தெரிவித்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

எம்.பி. பதவியை துறக்கிறார் கலைஞரின் மகள் கனிமொழி

ஈழத்தமிழர் விவகாரத்தில் இது 'அடையாள இராஜினாமா'

சென்னை, ஒக்.16

இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய மத்திய அரசுக்கு மேலும் அழுத்தங்களைக்கொடுப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக தி.மு.கவின் மத்திய ராஜ்யசபை உறுப்பினரும் முதலமைச்சர் கருணாநிதியின் மகளுமான கனிமொழி தமது எம்.பி. பதவியை இராஜிநாமாச் செய்கிறார்.

ஒக்ரோபர் 29ஆம் திகதி ராஜ்யசபை உறுப்பினர் பதவியைத் தாம் இராஜிநாமாச் செய்கி

(16 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் சண்டையை நிறுத்த முயல்வது புலிகளைக் காப்பாற்றுவதற்கான முயற்சி

அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா காட்டம்

சென்னை, ஒக். 16

''இலங்கையில் தற்போது நடக்கும் யுத்தம் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்துக்கு எதிரானதே. எனவே, அந்தப் போர் நிறுத்தப்படுவது விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுவதற்கான ஒரு முயற்சியே.''

- இவ்வாறு தமிழக முன்னாள் முதல்வரும் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா கூறியிருக்கின்றார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அனைத்துக் கட்சி மாநாட்டில் எட்டப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே ஜெயலலிதா இப்படித் தெரிவித்திருக்கின்றார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

களுத்துறைச் சிறையில் இருந்து விடுதலையாகி வந்தவர் உரும்பிராயில் நேற்றுச் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஒக். 16

களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து விடுதலையாகி யாழ்ப்பாணம் வந்திருந்த இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை உரும்பிராய் சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உரும்பிராய், சிவகுல வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு சுதன்ராஜா வயது(28) என்ப வரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் சம்பவ இடத்தில் நேற்றுக் காலை விசாரணைகளை நடத்தினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்தமிழருக்குத் தீர்வு தருவது இந்தியாவின் தலையாய கடமை!

தமிழக அரசின் முடிவுக்கு அரசியல் கட்சிகள் பாராட்டு

கொழும்பு, ஒக்.16

ஈழத்தமிழர் பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்திய மத்திய அரசு தலையிடவேண்டும் எனக்கோரி தமிழகக் கட்சிகள் எடுத்த முடிவு பாராட்டுக்குரியது என மூன்று தமிழ் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினை விவகாரத்தில் உடனடியாகத் தலையிடுவதற்கான ஏற்பாட்டு முயற்சிகளில் இந்திய மத்திய அரசு ஈடுபடவேண்டும் எனவும் மூன்று கட்சிகளும் கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,

(16 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில் நேற்று விமானத்தாக்குதல் 15 வீடுகள் சேதம்; வயல் வெளிகள் நாசம்!

கொழும்பு, ஒக்.16

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிலுள்ள மந்துவில் மற்றும் முள்ளியவளை ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் குடிமனைகள் மீது நேற்றுக்காலை விமானப்படையினரின் கிபிர் விமானங்கள் குண்டுமழை பொழிந்திருக்கின்றன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

மந்துவில் பகுதியில் காலை 9.10 மணியளவில் பறந்த இரு விமானங்கள் சுமார் 10 குண்டுகளை வீசின. இதனால், அந்தப் பகுதியில் உள்ள 8 வீடுகள் சேதமடைந்தன.

பின்னர் முள்ளியவளைப் பகுதியில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

வெளியுறவுக் கொள்கை குறித்து மத்தியை மாநில அரசு வற்புறுத்தக்கூடாது

காங்கிரஸ் பிரமுகர் சொல்கிறார்

புதுடில்லி, ஒக.16

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை குறித்து மாநில அரசுகள் மத்திய அரசை வற்புறுத்தக்கூடாது. காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி இவ்வாறு தெரிவித்தார்.

வெளியுறக் கொள்கை தொடர்பான நட

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஜெகதானந்தா - மஞ்சுபாசினி
தம்பதியினரின் செல்வப் புதல்வனும்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
மாணவனுமாகிய

செல்வன் ஜெ.ஜெவகர்

2008ஆம் ஆண்டு தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் 117 புள்ளிகள் பெற்று சித்தி யடைந்தமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, அத்தைமார், மாமாமார், சகோதர, சகோதரிகள், மச்சான் சக்தி, தாஸ், காயன், காயினி.

(79253) பொன்னாலை.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இணுவில் தெற்கு, இணுவில், துரை வீதியில் வசிக்கும் சுதாகரன் - சுசி தம்பதியினரின் செல்வப் புதல்வனும்
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனுமாகிய

லக்ஷன்

2008ஆம் ஆண்டு தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகள் பெற்று சித்தி யடைந்தமையையிட்டு அவர் கல்விக்கு ஊக்கமளித்த பாட சாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் கல்வியில் மேலும் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

துரை வீதி, இணுவில் தெற்கு, இணுவில்.

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, தம்பி, தங்கை, அப்பம்மா, அப்பம்மா, சித்தப்பா, அத்தை, மாமா குடும்பம்.

கண்ணீர் அஞ்சலி

எம்முடன் கல்வி முதுமாணி கற்கை நெறியில் கல்வி பயிலும் திருமதி விநாயகமூர்த்தி ஜானச்செல்வி அவர்களின் அன்புக் கணவர்

வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(அதிபர், யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை)

அவர்கள் (14.10.2008) செவ்வாய்க்கிழமை திடீர் மரணமானார்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி.... ஓம் சாந்தி.... ஓம் சாந்தி....

கல்வி முதுமாணி கற்கை நெறி ஆசிரிய மாணவர்கள். 2007- 2008
பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

மகளின் சிறைச்சாலையில் கைதிகள் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக். 16

கொழும்பு மகளின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மீது நேற்று இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரனிடம் கைதி கள் முறையிட்டுள்ளனர்.

மகளின் சிறைச்சாலைக்குள் நேற்று திடீரென நுழைந்த 20இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்குள்ள தமிழ்க் கைதி களை மோசமாகத் தாக்கியுள்ளனர் என்று அவர் கூறினார்.

(அ-சி)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.16

கொழும்பில் நடைபெறவுள்ள உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் பட்டமளிப் பிற்கு செல்லவிருக்கின்ற யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களின் பயண அனுமதி மற்றும் பயண ஏற்பாடு தொடர்பான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உயர்தொழில் நுட்ப நிறுவன ஆங்கில மொழி ஆய்வுகூடத்தில் நடை பெறவுள்ளது.

2006/ 2007 பட்டத்தகைமை பெற்ற அனைவரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு உயர்தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(1)

விற்பனைக்கு

மரவெள்ளிக்கிழங்கு சீவும் மெசின் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- STR Computer Service,
No.17, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
T.P. 0774210023

விற்பனைக்கு

மிகநல்ல நிலையிலுள்ள Delica Van (250,000/=), 5CD Set (Panasonic), Deck, P4 Computer (Full Set), Air Compressure, GAS Cooker, GAS அடுப்பு (பெரிய தேவைகளுக்குரியது), DISH Anterna (10அடி)
தொடர்பு: S.பிறேம், No.18, றக்கா றோட், யாழ்ப்பாணம். Tele- 9201

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சுதுமலை அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் கல்விகற்று 2008 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களான

செல்வன்
சந்திரமோகன் சந்திரகுமார்
125 புள்ளி

செல்வன்
சந்திரபாலன் விதுசன்
117 புள்ளி

செல்வி
பிரபாகரன் பிரவீனா
114 புள்ளி

ஆகியோரை கல்வியில் மென்மேலும் சிறந்து விளங்க வாழ்த்துவதுடன் அவர்களை வழிநடத்திய வகுப்பா சிரியரான வசந்தராணி அவர்களையும் வாழ்த்தி நிற் கின்றோம்.

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

வாழ்த்துவோர்:
யுவசக்தி சன சமூகநிலையம்.

மரண அறிவித்தல்

திருமதி மகேஸ்வரி சபாரத்தினம்
(ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்)

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொட் டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சபாரத்தினம் 10.10.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகர் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துக் குமாரு - கனகம் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சபாரத் தினத்தின் (R.V.D.B) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சதாசிவம், பொன்னம்மாவின் சகோதரியும், காலஞ்சென்ற சோமசுந்தரம், லீலாவதியின் மைத்துனியும், பாஸ்கரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), திருமதி சூரியகலா தேவராசா (கொழும்பு) ஆகியோ ரின் அன்பு தாயும், தேவராசா, தாருணி, விக்னகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், திவ்வியா, சத்தியா ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2008) வியா ழக்கிழமை பி.ப. 1 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலை யில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கொட்டாஞ்சேனை, திருமதி சூரியகலா தேவராசா (மகள்).
கொழும்பு - 13. தொ.பே.இல.0112330337

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கேள்விப்பத்திர அறிவித்தல்

பின்வரும் பொருள்களை யாழ். பல்கலைக்கழகத்தில் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படு கின்றன.

மரத் தளபாடங்கள்

கதிரை கைபிடிகளுடன்	13
கண்ணாடி முகப்பிலான மர அலுமாரி	17
திறப்புக் கோர்வைத் தாங்கி (1 1/2 X 1' X 1/4')	02
ஆய்வுக்கூட இருக்கை (60 cm X 37 cm X 29 cm)	10
ஆய்வுக்கூட இறாக்கை (6' X 4' X 1 1/2)	05
விளம்பரப்பலகை (3' X 2')	01
விளம்பரப்பலகை (4' X 3')	03
பிஜன் ஹோல்டர் (Pigeon Holder)	01
பார்வையாளர் வாங்கு	10
சதுரங்கு மேசை	10
அலுவலக மேசை	12
கற்கை மேசை	04
விளையாட்டு உபகரண தாங்கி	04

உருக்குத் தளபாடங்கள்

கோப்பு அலுமாரி	17
உருக்கு அலுமாரி (அரை)	27
உருக்கு அலுமாரி (முழு)	25
உருக்கு இறாக்கை	06

கணனித் தளபாடங்கள்

கணனிக் கதிரை	12
கணனி மேசை	26

கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப்பணமாக ரூபா 2500.00 மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 15000.00 யாழ். பல்கலைக்கழகச் சிறாப்பரது கரும பீடத்தில் அல்லது பல்கலைக் கழக கிளை மக்கள் வங்கி இலக்கம் 90501 க்கு பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன், சிரேஷ்ட உதவி நிதியாளரிடம் (விநியோகம்) தொடர்பு கொண்டு கேள்விப்பத்திர ஆவணங்களை 17.10.2008 தொடக்கம் 28.10.2008 திகதி வரை காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் நிதியாளர் *யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப் பாணம்* என முகவரியிடப்பட்டு 10.11.2008 பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாக பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தளபாடங்கள் வழங்கலுக்கான கேள்விப்பத்திரம் UJ/F/SK/T/03/08" எனக் குறிப் பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் அல்லது எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட அவர்களது பிரதிநிதிகள் சமுகம் தரலாம்.

பதில் பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

IRQUE Project funded by World Bank

Credit No: 3781 - CE

Invitation for Bids

1. Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 50 m towards the cost of the Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE) Project and intends to apply part of the proceeds of this credit to eligible payments under the contract for which this invitation for quotations is issued.

2. The University of Jaffna will receive sealed Bids for the following works and receiving bids will be closed at 2.00 p.m. on 07.11.2008. Bids should be submitted on the forms avaiable from Deputy Director / Programme Affairs, Office of the LTS/IRQUE Project, University of Jaffna (Tel. No.021222 3748) up to 05.11.2008 on a payment of non-refundable tender fee as given below.

3. All bidders shall be registered with the Institute for Construction Training and Development (ICTAD), under the grade and specialty given below.

Contract No	Work	Non refundable deposit (Rs)	ICTAD Registration(building)
IRQUE/JFN/PSC/5/WORKS/04 & 05	Renovation of Toilets in the Fac ulty of Science, Lecture Halls 1M & 2M and Miscellaneous	500.00	M8/C9
IRQUE / JFN / PSC / 5 / WORKS /01(c)	Renovation of Old Science Library	500.00	M8/C9

4. Bidding documents may be inspected free of charge at the office of the LTS/IRQUE Projecct, University of Jaffna.

5. Sealed Bids may be despatched either by registered post or hand delivered to the office of the LTS/ IRQUE Project, University of Jaffna to receive before closing time.

6. Bids will be opened immediately after the closing at the above address.

7. Bidders or their authorized representatives are requested to be present at the opening of Bids.

8. For further details or clarifications, bidders may contact Deputy Director / Programme Affairs, Office of the LTS/ IRQUE Project, University of Jaffna or Engineer, Unity Consultant Management Agency, Temple Road, Nallur, Jaffna(T.P.: 021 222 9736 or Mobile 0777 041401)

Director,
LTS/IRQUE Project.
15.10.2008

(C/555454)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

கொழும்புக்கும் புதுடில்லிக்கும் தமிழகம் வைத்துள்ள 'செக் - மேட்'!

தமிழகத்தில் நேற்றுமுன்தினம் தமிழக முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டம் எடுத்த அதிரடி முடிவு இரு தரப்புகளைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தி யிருக்கும் என்பது நிச்சயம்.

ஒன்று - இந்திய மத்திய அரசு.

மற்றையது - எதிர்பார்க்கப்பட்டபடி கொழும்பு அரசு.

வன்னியின் மீது தான் தொடுத்துள்ள பெரும் போருக்கும் - இராணுவ நடவடிக்கைக்கும் - இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான தனது செயற்பாடுகளுக் கும் - புதுடில்லியின் முழு ஆதரவு உள்ளது என்று கொழும்பு அரசுத் தலைமை இனிமேல் - முன்னைய மாதிரி அவ்வப்போது - 'கயிறு திரிக்க' முடியாது. அத்த கைய கயிறு திரித்தலுக்கு முழு ஆப்பு வைத் திருக்கிறது அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானம்.

ஒரு சமாளிப்புக்காகவேனும் - ஒரு பேச்சுக்காக வேனும் - மேற்படி விடயங்களில் கொழும்பு அரசின் போக்குக்கு புதுடில்லியின் ஆதரவு, அனுசரணை, ஒத்துழைப்பு, ஆசி என்பன இருக்கின்றன என இனிக் கொழும்பு கூறுமானால் தமிழகம் புதுடில்லிக்கு எதிரா கக் கொதித்துப்போய் விடும் என்பது நிச்சயம்.

இலங்கைப் படையினருக்கு இந்தியா, இதுவரை உயர்ந்த தரத்திலான இராணுவப் பயிற்சிகளை வழங்கி வந்தது.

சத்தம் சந்தடியின்றி 'ராடர்' கண்காணிப்புக்கருவி போன்ற ஆயுதத் தளபாட வசதிகளையும் இலங்கைக் குப் புதுடில்லி வழங்கி வருகிறது. வவுனியாவில் புலிக ளின் கொமாண்டோத் தாக்குதலில் இந்த 'ராடர்' தாக்கி அழிக்கப்பட்டதுமே மாற்று 'ராடர்' வசதியை விரைந் தடித்துக் கொண்டுசென்று - சில மணி நேரத்துக்குள் ளேயே - வழங்கி உதவியது இந்தியா.

பாகிஸ்தான், சீனா போன்ற - தனக்கு உடன்பாடில் லாத - தரப்புகளிடமிருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்தியா, இலங்கைக்கு இலகு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

இலங்கையுடன் கூட்டுக் கடல் கண்காணிப்பில் ஈடுபட்டு, புலிகளின் ஆயுத சுவீகரிப்பு முயற்சிகளை அடியோடு தடுத்து நிறுத்தும் கைங்கரியத்திலும் இந் தியா முனைப்பாக ஈடுபட்டிருக்கின்றது என்பது பகிரங் கப்படுத்தப்படாத இரகசியம்.

அதேசமயம், இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டபடி - ஆட்கடத்தல், காணாமற் போகச் செய்தல், சட்டவிரோதப் படுகொலைகள், கப்பம் அறவிடல், ஊட க அடக்குமுறை போன்ற மோசமான மனித உரிமை மீறல்களுக்கு வாய்ப்பளித்தபடி - தமிழர் தாயகம் மீது கொடூர யுத்தத்தை ஏவி விட்ட படி - இலங்கை இனப் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதில் தான் தீவிரமாகவும், நேர்மையாகவும் செயற்பட்டு வருவதாக இதுவரை கொழும்பு அரசு சர்வதேசத்துக்குப் படம் போட்டு வந்தது. அந்த நிலைப்பாட்டுக்கு மௌனசாட்சி யாகவும், தலையாட்டி ஆதரவு வழங்கும் சக்தியாகவும் செயற்பட்டதன் மூலம் கொழும்பின் இந்த அராஜகப் போக்குக்குத் தெரிந்தோ தெரியாமலோ துணைபோனது புதுடில்லி.

அந்த விபரீதப் போக்கு இனித் தொடராமல் தடை போட்டு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றது தமிழக அனைத் துக் கட்சிகளின் தீர்மானம்.

கொழும்பின் இன அழிப்பு அராஜகத்துக்கு இந்தியா இனியும் துணை போகுமானால் இந்திய மக்களவையில் - நாடாளுமன்றில் - அங்கம் வகிக்கும் தமிழக எம்.பிக்கள் நாற்பது பேரும் கூண்டோடு இராஜிநாமாச் செய்வார்கள் என்று தமிழகம் ஒட்டுமொத்தமாகத் தீர்மானித்து விட்டது.

ஈழத் தமிழர் தாயகம் மீது கொழும்பு அரசு தொடுத் துள்ள அராஜக யுத்தத்துக்கு முடிவு கட்டவும் -

அந்த யுத்தத்தில் சிக்கிப் பேரவலத்தைச் சந்தித்து, அனர்த்தத்துக்குள் மூழ்கியிருக்கும் ஈழத் தமிழர்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் மருந்துப் பொருட்கள் தங்கு தடையின்றிக் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் -

எதிர்காலத்தில் இலங்கைக்கு எந்த ஆயுத, தளபாட உதவிகள் உட்பட இராணுவ ஒத்தாசைகளும் வழங்கப் பட மாட்டாது என்பதைத் தீர்மானித்துச் செயற்படுத்த வும் -

அப்பாவித் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையால் மோசமான தாக்குதல்களுக்கு உள்ளாவ தற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் -

இந்திய மத்திய அரசுக்கு இரு வார காலக்கெடு விதித்திருக்கின்றது தமிழகம்.

இந்த எச்சரிக்கையின் விளைவு வெறும் நாற்பது எம்.பிக்களின் இராஜிநாமாவுடன் முடிந்துவிடாது. அந்த எம்.பிக்களின் ஆதரவில் தங்கி ஆட்சி நடத்தும் இந்தி யாவின் காங்கிரஸ் அரசின் சரிவோடுதான் முடியும். அந்தச் சரிவோடும் விடயம் அடங்கி விடாது. அதன் பின்னர் வரக்கூடிய பொதுத் தேர்தலில் தென்னிந்தியா வில் காங்கிரஸ் மீண்டும் காலூன்றவே முடியாது என்ற அவஸ்தையையும் அதற்கு நிச்சயமாக ஏற்படுத்தும்.

எனவே, இலங்கையில் தமிழர் மீதான யுத்தத்தை நிறுத்துவது உட்படப் பல விடயங்களை நிபந்தனையாக விதித்து தமிழகம் முன்னெடுத்திருக்கும் இந்தக் காய் நகர்த் தல், ஈழத்தமிழர் பிரச்சினையில் புதுடில்லி அரசுக்கும் இலங்கை அரசுக்கும் வைத்திருக்கும் நல்ல 'செக் - மேட்' என்றால் மிகையாகாது.



வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட "யாழ்ப்பாணப் பெட்டகம் - 1" என்ற வர்ணப்புகைப்படக் கண் காட்சி நேற்று தெல்லிப்பழைப் பிரதேச செயலக மண்டபத்தில் ஆரம்பமானது. இக் கண்காட்சி தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறும். வரவேற்புப் பதாகையுடனான நுழைவாயிலையும் தமிழர்களின் முற்காலப் பாவனைப் பொருள்கள் மற்றும் வர்ணப்புகைப் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதையும் மேலே உள்ள படங்களில் காணலாம். (படங்கள்: கலைஞன்)

யாழ்ப்பாணப் பெட்டகம் புகைப்படக் கண்காட்சி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகும்

தெல்லிப்பழை, ஒக்.16

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேர வையின் ஏற்பாட்டில் "யாழ்ப்பாணப் பெட்டகம் -1" என்ற மாபெரும் வர் ணப்புடக் கண்காட்சி தெல்லிப் பழைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நேற்று ஆரம்பமானது.

பிரதேச செயலர் சு.முரளிதரன் தலை மையில் அரசாங்க அதிபர் க.கணேஸ் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

ஓய்வுபெற்ற மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம், ஓய்வு பெற்ற பிரதேசசெயலர் கலாநிதி க.குண ராசா ஆகியோர் கௌரவவிருந்தினர் களாகவும் யாழ்.மேலதிக அரசாங்க அதி பர் ஆ.சிவசுவாமி, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே. தி.செல்வரட் ணம், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாவும் கலந்து கொண்டனர்.

முன்னதாக காலை ஒன்பது மணி யளவில் விருந்தினர்கள் அனைவரு மத் பிரதான நுழைவாயிலிருந்து மங் கள வாத்திய சகிதம் அழைத்து வரப் பட்டனர். யாழ்ப்பாண அரசாங்க அதி பர் க.கணேஸ் கண்காட்சி மண்டபத் தைத் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் சிறப் புரைகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வி யல், சமூக, பண்பாட்டு விழுமியங் களைச் சித்திரிக்கும் பெரும் எண் ணிக்கையான புகைப்படங்களுடன், தமிழ் அறிஞர்கள், கலைஞர்கள் ஆகி யோரின் புகைப்படங்களும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

(அ-150)

நீர்வழங்கலில் தடை

யாழ்ப்பாணம், ஒக்.16

பருத்தித்துறை வீதி - வேம்படி வீதி சந்தியில் அமைந்துள்ள திரு நெல்வேலி குருநகர் நீர் வழங்கலுக் கான நீரேற்று குழாயில் உடைவு ஏற் பட்டுள்ளதால் - அவசர திருத்த வேலை மேற்கொள்ளப்படவுள்ளதால் - இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் குருநகர் பகுதிக் கான நீர் வழங்கல் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

வாராந்த ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்ட பத்தில் நடத்திவரும் வாராந்த ஆன் மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள் ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வல்வெட்டித்துறை சிதம்பராக்கல் லூரி மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெறும்.

சிமெந்து போதியளவு எடுத்து வரப்பட்டுள்ளமையால் முண்டியடித்துக்கொண்டு கொள்வனவு செய்யவேண்டாம்

பொதுமக்களிடம் யாழ்.செயலகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்.குடாநாட்டுக்கு போதியளவு சிமெந்து கப்பல் மூலம் எடுத்துவரப் பட்டுள்ளது. எனவே மக்கள் முண்டிய டித்துக் கொண்டு அதிக விலை கொடுத்து சிமெந்துக் கொள்வனவுசெய்ய வேண்டாம் என யாழ்.செயலகம் மற் றும் சிமெந்து எடுத்துவரும் முகவர் கள் பொதுமக்களைக் கேட் டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரி விக்கப்பட்டதாவது:

யாழ்.குடாநாட்டுக்கு ஒரு லட்சத்து 20ஆயிரம் சிமெந்துப் பைக்கற்றுகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள் ளன. 'றுகுணு' கப்பல் மூலம் 52 ஆயி ரம் சிமெந்து பைக்கற்றுகள் எடுத்து வரப்பட்டுள்ளன. இவற்றைவிட அடுத்து வரும் கப்பல்களிலும் போதியளவு சிமெந்தை எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்கள் முண்டியடித் துக்கொண்டு அதிக விலைகொடுத்து சிமெந்தினைக் கொள்வனவு செய்ய வேண்டியதில்லை. இவ்வாறு முண்டி யடித்துக்கொண்டு கொள்வனவு செய்வதைப் பயன்படுத்தி சில வியா பாரிகள் சிமெந்தை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றார்கள். அதற்கு பொது மக்கள் துணைபோகக் கூடாது

சிமெந்து கட்டுப்பாட்டு விலை யான ஆயிரத்து 600 ரூபாவுக்கு விற் பனை செய்யவேண்டுமெனத் தீர்மா னிக் கப்பட்டுள்ளபோதிலும் மேலதிக செலவுகளை கருத்திற்கொண்டு ஆயிரத்து 750 இற்கு விற்பனை செய் யலாம் என சம்பந்தப்பட்ட தரப்புகள் அறிவித்துள்ளன. இதேவேளை –

தற்போது எடுத்துவரப்பட்டுள்ள சிமெந்தில் நான்கில் ஒரு பகுதியி னையை பாடசாலைகள் மற்றும் திணைக்க ளங்கள் ஆகியவற்றின்அபிவிருத்திப் பணிகளுக்கு சிமெந்து முகவர்கள் வழங்கியுள்ளனர். (50)

நாளை

ஐப்பசி 01	17.10.2008 வெள்ளிக்கிழமை
திதி:	திருதியை மு.இ.8.21வரை
நட்சத்திரம் :	கார்த்திகை பி.இ.02.41 வரை
சுபநேரம் :	06.02 - 07.02
ராகுகாலம் :	10.32-12.02

உங்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்...

உறுப்புரை - 28

இப்பிரகடனத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங் களும் முழுமையாக எய்தப்படக்கூடிய சமூக சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையாவர்.

உறுப்புரை - 29

எந்தவொரு சமூகத்தினுள் தமது ஆளுமையின் வளர்ச்சிக்கு சாத்தியம் உண்டோ, அந்த சமூகத்தின் பால் ஒவ்வொருவரும் உரித்துடையவர் ஆவர்.

உறுப்புரை - 30

இப் பிரகடனத்தில் உள்ள உரிமைகள், சுதந்திரங்களை எந்த ஒரு நாடோ, தனியாரோ அழிக்கும் முயற்சியில் ஈடுபட உரிமையை அளிக்கும் உரித்தினையைக் கொண்டுள்ளதாக பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடியில் புதிதாக அமைக்கப்பட்ட 'ஸ்கானிங் சென்ரர்' திறப்பு விழாவும் நியூ மெடிக்கல் சென்ரரின் 25ஆம் ஆண்டு நிறைவு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும் 'ஸ்கானிங் சென்ரரை' அவர் நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் 3ஆவது படத்திலும் காணலாம்.

கடந்ததைப் பற்றிக் கவலைப்படாமல் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதுவே மனதுக்கு இதமாக இருக்கும்...!

102ஆவது ஆண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் முதாட்டி உதிர்க்கும் அனுபவ மொழி இது

எனது பிள்ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என உள்ளத்தில் எழுந்த இலட்சியவெறி நிறைவேறிய சந்தோசம் என்னை நூறு வயதுக்கு மேல் வாழவைத்தது. என்னை நூறு வயதுக்கு மேல் வாழவைத்த பெருமை தென்மராட்சி மண்ணுக்கே உரித்தானது.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேசத்தின் மூத்த பிரஜையான 102 வயதில் வாழ்ந்து கொண்டிருக்கும் அல்லாரையைச் சேர்ந்த மூதாட்டி திருமதி சரவணை பூரணம் உதயனுக்குத் தெரிவித்தார்.

102 வயதிலும் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட முதியோர் விழாவிற்கு உற் சாகத்தில் வருகை தந்திருந்த இந்த மூதாட்டி, அப்பகுதிக் கிராம அலுவலர் தி.மகாலிங்கம் எனக்கு அறிமுகப்படுத்தினார்.

"உதயன்" பத்திரிகை நிறுவனப் பிரதிநிதி என என்னை அறிமுகப்படுத்திய போது, ஒரு வருடத்திற்கு முன்னர் 100 ஆவது பிறந்தநாள் கொண்டாடியவரை பேட்டி எடுத்தது நீங்கள்தானா" எனக் கேட்டு என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்தார் அந்த மூதாட்டி.

அவரின் தோற்றம், பேச்சு ஆகியவற்றைப் பார்த்தபோது எனக்கு அவரின் வயது தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டு அவரின் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தேன். அவரின் பிறந்த திகதி 17.06.1907 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்பின்னர் என்னால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தாமதமின்றி உடனுக்குடன் பதில ளித்தார்.

மூதாட்டியிடமிருந்து கிடைத்த தகவல்களை உங்களுக்குத் தொகுப்பாகத் தெரிவிக்கின்றேன்.

கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்

யாழ்ப்பாணம், கலட்டிப் பகுதியை பிறப்பிடமாகக்கொண்ட நான் 75 வருடங்களுக்கு முன்னர் தென்மராட்சி யின் அல்லா ரையைப் புகுந்த இடமாகக் கொண்டேன். எனது கணவர் கூலி வேலை செய்த போதி லும் எங்களது மகிழ்வுக்குக் குறைவு இருக்கவில்லை. எமது இல்லற வாழ்வின் பயனாக எட்டுப் பிள்ளைகள் பிறந்தனர். இவர்களில் ஒரு பெண் குழந்தை சிறுவயதில் இறந்த தால் ஐந்து ஆண் பிள்ளைகளையும் இரண்டு பெண் பிள்ளைகளையும் அன்பு டன் குறையின்றி வளர்த்தோம்.

எனது மூத்த மகளுக்கு யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியில் திருமணம் செய்து வைத்து மகிழ்வுற்றோம். எமது மகிழ்ச்சி இறைவனுக்குப் பொறுக்கவில்லை. 45 வருடங்களுக்கு முன்னர் நல்லூரில் இருந்த மகளின் வீட்டுக்கு வண்டிலில் விறகு கொண்டு சென்றவர் அங்குள்ள கிணறொன்றில் தவறிவீழ்ந்து சடலமாகக் கொண்டு வந்தனர். அப்போது எனது கடைசி மகள் ஆறு மாதக் கருவாக எனது வயிற்றில் இருந்தாள். அவள் இப்போது வெளிநாட்டில் பிள்ளை களுடன் சந்தோச மாக வாழ்கிறாள்.

எனது கணவர் திடீரென எங்களை விட்டுச் சென்றதால் நானும் எனது பிள்ளைகளும் செய்வதறியாது தவித்தோம்.

தென்னைவள

கூட்டு உழைப்பினால் உயர்ந்தோம்

பிறகு கலட்சி மகள் பிறந்து ஆறு மாதங் கள் சென்ற பின்னர் என்னுடன் இருந்த பிள் ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டுமாயின் வீட்டில் நான் இருந் தால் எதுவும் நடவாது எனவும் எனது கடும் உழைப்பினால்தான் அவர்களின் வாழ்க் கையை உயர்த்த முடியுமென வும் உணர்ந்த நான் செயலில் இறங்கினேன். எனக்குப் பக்கத் துணையாக எனது பிள்ளைகளும் எனது கணவரின் உறவினர்களும் எனது உறவினர்களும் இருந்த தால் எங்களது கூட்டு உழைப்பிற்குப் பயன் கிடைத்தது.

நான் எதிர்பார்த்ததைவிட பிள்ளைகள் நல்ல நிலைக்கு வந்துள்ளனர். எனது இலட் சியத்திற்கும் எடுத்த முயற்சிக்கும் கிடைத்த வெற்றியே என்னை நூறு வயதுக்கு மேல் வாழவைத்துள்ளது. எனது (மகளின் மகள்) பேர்த்தியுடன் எனது வீட்டில் வசித்து வரு கின்றேன். அனைத்து மக்களும், மருமக்க ளும், பேரப்பிள்ளை களும், பூட்டப்பிள்ளை களும் என்னை அன்புடன் கவனத்துடன் பராமரித்து வருகின்றனர்.

அனுபவத்தில் கண்ட உண்மை

போனதைப் பற்றிக் கவலைப்படுவதை விட வருவதை நினைத்துச் சந்தோசப்படுவது மனதுக்கு இதமானது. இறந்த காலத்தை யோசிப்பதை விட எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதால் பல நன்மைகள் ஏற்படும். அதனை அனுபவ ரீதியில் கண்டுள்ளேன்.

கவலை மனித வாழ்க்கைக்கு உதவாத ஒன்று. கவலைப்படுவதால் ஒரு பயனும் கிடையாது. கவலையில்லாமல் வாழ கடின உழைப்பு அவசியமாகிறது. எமது சிந்தனை முழுவதும் உழைப்பில் இருந்தால் வேறெதையும் சிந்திக்க நேரமிருக்காது. நோய் நொடிகள் இருக்காது. உழைப்பு, வீடு, பிள்ளைகளின் நல்வாழ்வு இவையே எனது தாரக மந்திரமாக இருந்ததால் கவலை என்பது என் வாழ்க்கையில் ஏற்படவில்லை என்றார்.

முன்னரைப்போல் திடகாத்திரமாக வேலை ஏதும் செய்கிறாரா என மூதாட்டியின் மகளிடம் கேட்டபோது வீட்டு வளவுக்குள் வாழைகள் வைத்து தொட்டியில் நிரப்பப் படும் தண்ணீரை வாளியில் எடுத்துச் சென்று ஊற்றி வளர்த்து வருகிறார் என்றார்.

முதியோர் தின விழாவுக்கு வரவேண்டுமென விதானையார் கூறியதையடுத்து உற்சாகத்துடன் புறப்பட்டு வந்தார் என மூதாட்டியின் மகள் தெரிவித்தார்.

எனது பார்வையில் சுமாரான தோற்றம் கொண்ட மூதாட்டிக்கு கண்பார்வை தெளிவாக இருந்ததையும், காது கேட்கும் தன்மை ஓரளவு குறைந்திருந்ததையும், எழுந்து நடமாடும் நிலையில் இருந்ததையும் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட பரிசுப் பொதியினை பெயர் அறிவித்ததும் தானே நடந்து சென்று வாங்கியதையும் அவதானிக்கமுடிந்தது.

முதியோர்கள் எமது நாட்டின் விடிவிளக்கு கள் என்னும் நோக்குடன் இந்த மூதாட்டி இன்னும் பல வருடங்கள் சகல சௌபாக்கியங்களுடன் வாழவேண்டுமெனக் கூறினேன். எனக்குத் தனது ஆசியை வழங்கி வழி அனுப்பிவைத்தார். (ப)

வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வுகளியன்று

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ் விழிப்புலனற்றோர் சங்கமும் யாழ்.லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து நடத்தும் வெள்ளைப் பிரம்புதினம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித சென்.யேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

விழிப்புலன் குறைந்தோர் சங்கத் தலைவர் ஆ. மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203-302)

இறைவனே வேண்டும் என்று கேள்!

இறைவன், நீ கேட்பதற்கு முன்னாலேயே, உனக்கு வேண்டியதை வழங்குகிறார். "ஓ மனமே, விருப்பங்கொள்ளாதே, எதையும் கேளாதே. கேட்டால் தாமதமாகும். கேட்காமலேயே கிடைக்கும். ஒன்றும் கேட்காமலேயே சபரி வேண்டியதைப் பெற்றாள். ஒன்றும் கேட்காமலேயே ஜடாயுவுக்கு இராமன் நற்கதி அடைய அந்திமக் கிரியைகள் செய்தார். அதிகம் கேட்கக் கேட்க அனைத்தும் தாமதமாகும். ஒன்றும் கேட்காதே. இறைவன் மட்டும் வேண்டுமெனக் கேள்". இறைவன் உள்ளிருக்கும்போது, மற்றவையெல்லாம் கிடைத்துவிடும். தங்கம் கிடைத்தால், அதிலிருந்து பல நகைகள் செய்துகொள். இல்லாவிடில் சங்கிலி, மோதிரம் என்று ஒவ்வொன்றாகக் கேட்டு அடையவேண்டும்.

கடவுள் வேண்டுமென்று கேள். பிறகு அவர் மூலம் உனக்குத் தேவையானது எல்லாம் கிடைக்கும்.

இறைவனை மறக்கிறாய். இறைவன் அனைவருக்கும் எசமானர். இருந்தாலும் கடவுளை மறந்து, உலகியல் வழியில் அல்லவா, நாம் செல்கிறோம்...!

சாயி சிந்தனை

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23 ★ 05 ★ 1972

உதிர்வு
28 ★ 09 ★ 2007

திருமதி கிருபாகரன் சுதர்ஜினி

நிதி: துதியை

ஆற்றொணாத் துயருடன் ஆண்டொன்று
ஓடி மறைந்த போதும் எம் இதயத்தில்
என்றும் நீ எங்களுடன் இருக்கின்றாய்
பிறப்பு, இறப்பு வாழ்வின் நியதி
என்றாலும் எம் நெஞ்சம்
பொறுக்குதில்லையே உன் பிரிவை
உன் ஆத்மாவிற்கு சொர்க்கம் நிச்சயமே.

உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தகவல்:

க.திருஷ்ணாமோகன் (சகோதரன்)
கி.சிவஞானஜோதி (மைத்துனி - ஆசிரியை, கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம்)
கைதடி மேற்கு.

தாய், பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மருமக்கள் மற்றும் உற்றார்,
உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிப் போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது நியூஸிலாந்து அணி!

தொடரை வென்ற மகிழ்ச்சியில் நியூஸிலாந்து அணி வீரர்கள்.

சிட்டகாங், ஒக். 16

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

டானியல் விட்டோரி தலைமையிலான நியூஸிலாந்து கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரண்டு அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரில் முதல் ஆட்டத்தில் பங்களாதேஸும், 2ஆவது ஆட்டத்தில் நியூஸிலாந்தும் வெற்றிபெற்றிருந்தன.

இந்நிலையில் 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி சிட்டகாங்கில் நேற்று முன்தினம் நடந்தது. டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளில் சிம்பாப்வே தவிர்த்து முதல் முறையாக பெரிய அணி ஒன்றுக்கு எதிராக தொடரை வெல்லும் நம்பிக்கையுடன் பங்களாதேஷ் அணி களமிறங்கியது. சொந்த மண்ணில் அந்த அணியின் 100ஆவது ஒருநாள் போட்டி இதுவாகும்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. தொடக்க ஆட்டக்காரர்கள் 13 ஓட்டங்களுக்குள் வெளியேறினாலும், ரோஸ் ரெய்லர், ஜேமி ஹாவ் ஆகியோர் நியூஸிலாந்து அணியை தூக்கி நிறுத்தினர். தனது 3ஆவது சதத்தைப் பூர்த்திசெய்த ரெய்லர் 103 ஓட்டங்களும், ஹாவ் 73 ஓட்டங்களும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஒரு கட்டத்தில் 11.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 49 ஓட்டங்கள் எடுத்து ஓரளவு ஸ்திரமான நிலையில் இருந்தது. ஆனால் அடுத்து 28 ஓட்டங்கள் சேர்ப்பதற்குள் 5 விக்கெட்டுக்களை அந்த அணி பறிகொடுத்தது. இதன் பின்னர் சரிவில் இருந்து அணியால் மீள முடியவில்லை.

50 ஓவர்களில் பங்களாதேஷ் அணியால் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 170 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. இதனால் 79 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்று 2-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. பங்களாதேஷ் அணியில் அதிகபட்சமாக நயீம் இஸ்லாம் 46 ஓட்டங்களும், தமிம் இக்பால் 35 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் - நியூஸிலாந்து அணிகளிடையே 2 டெஸ்ட் கொண்ட தொடரில் முதலாவது போட்டி நாளை சிட்டகாங்கில் தொடங்குகிறது.

செஸ் போட்டி ஜேர்மனியில் ஆரம்பம்

உலக சம்பியன்ஷிப் செஸ் போட்டி ஜேர்மனின் போன் நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில் உலக சம்பியன் இந்தியாவின் விசுவநாதன் ஆனந்த், ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னின் மோதுகிறார்கள்.

இவர்களிடையே மொத்தம் 12 ஆட்டம் நடக்கும். நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்று ஆட்டத்தில் ஆனந்த் சமநிலை அடைந்தார்.

சமநிலையில் முடிப்பதற்காக நேரம் கடத்தினாராம் கங்குலி!

ஆஸி. ஊடகம் இப்படிக் குற்றச்சாட்டு

மெல்போர்ன், ஒக். 16

"பெங்களூர் டெஸ்ட் சமநிலையில் முடிந்ததற்கு இந்திய வீரர் சௌரவ் கங்குலிதான் காரணம். வேண்டுமென்றே நேரத்தை கடத்தி அவுஸ்திரேலியாவின் வெற்றி வாய்ப்பை அவர் பறித்துவிட்டார்" என அவுஸ்திரேலியா ஊடகம் ஒன்று குற்றம் சாட்டியுள்ளது. இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகளும் பெங்களூரில் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. இப்போட்டி சமநிலையில் முடிந்ததற்கு இந்திய வீரர் சௌரவ் கங்குலிதான் காரணம் என அவுஸ்திரேலியாவின் 'நஷனல் நைன் நியூஸ்' செய்தி நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

இப்போட்டி குறித்து அவுஸ்திரேலியாவில் இயங்கி வரும் 'நஷனல் நைன் நியூஸ்' நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், "பெங்களூர் டெஸ்ட் சமநிலையில் முடிய இந்திய வீரர் சௌரவ் கங்குலி தான் காரணம். வேண்டுமென்றே அவர் போட்டியைச் சீர்குலைத்து விட்டார். முதலாவதாக போதிய வெளிச்சமின்மை என நடுவர்களிடம் கூறி அவர்களை இணங்க வைத்தார். மீண்டும் ஆட்டம்துவங்கிய போது, சக வீரர் லக்ஷ்மன் மைதானத்துக்கு விரைவில் வர, தொடைப் பகுதியில் பாதுகாப்புக்காக வைக்கப்படும் அ

டையை மறந்து வைத்து விட்டு மீண்டும் எடுக்கச் சென்றார். இதன் மூலம் சிறிது நேரத்தைச் செலவழித்தார். இவற்றை எல்லாம் உள்நோக்கத்துடன் செய்து, அவுஸ்திரேலியாவின் வெற்றி வாய்ப்பைப் பறித்து விட்டார். தவிர, நடுவர்களும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சூழ்ச்சி செய்து விட்டனர். ஆட்டத்தை மாற்றக்கூடிய முக்கியமான தருணங்களைத் தடை செய்து விட்டனர். இரண்டு முறை வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் தடைப்பட்ட போதும், சூரியன் பிரகாசமாகவே இருந்தது" என வெளியிட்டுள்ளது.

மொகாலி மைதானத்துக்கு உச்சக் கட்டப் பாதுகாப்பு!

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலாம்

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலின் எதிரொலியாக மொகாலியில் நடைபெற இருக்கும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டிக்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 700 பொலிஸார் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மொகாலி நகரில் நாளை துவங்க இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு தலை நகர் டில்லியில் தீவிரவாதிகளின் சதிச் செயலால் தொடர் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதன் எதிரொலியாக மொகாலி டெஸ்ட் போட்டிக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 700 இற்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு குவிக்கப்பட உள்ளனர். இது குறித்து மொகாலியின் தலைமை பொலிஸ் அதிகாரியான ஜாதிந்தர் சிங் அவுலக்கிடம் கேட்ட போது, நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமீபத்தில் ஏற்பட்ட தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக, மொகாலி அரங்கத்தைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 700 இற்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு நியமிக்கப்பட உள்ளனர் என்றார் அவர்.

தவிர,தனியார் நிறுவனம் சார்பிலான பாதுகாப்பிற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று பஞ்சாப் கிரிக்கெட் சங்க செயலாளர் எம்.பி.பாண்டோவ் தெரிவித்தார்.

பார்வையாளர்கள் நல்ல முறையில் கிரிக்கெட் போட்டியை பார்த்து ரசிக்க வேண்டும். இதற்கு உத்தரவாதம் அளிப்பது எங்களது பொறுப்பு என்றும் பாண்டோவ் கூறினார்.

மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரி ஜாதீந்தரிடம் கேட்ட போது, நுழைவு வாயிலில், ஆயுத சோதனைக் கருவி மூலம் சோதனை நடைபெறும் என்றும், பார்வையாளர்களுக்கு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் அனுமதி அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தவிர, போட்டி நடக்க இருக்கும் பஞ்சாப் கிரிக்கெட் சங்க அரங்கத்தில் தீவிரவாத தடுப்பு குழுவும், வெடிகுண்டை செயலிழக்கச் செய்யும் குழுவும் பயன்படுத்தப்படும் என்றும் சிங் குறிப்பிட்டார்.

இரண்டாவது டெஸ்ட் நாளை; இந்திய அணியில் மாற்றம்?

மொகாலி, ஒக். 16

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையேயான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மொகாலியில் நாளை தொடங்குகிறது. இந்தப் போட்டிக்கான இந்திய அணியில் மாற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிரேஷ்ட வீரர்களான டெண்டுல்கர், கங்குலி, லக்ஷ்மன், டிராவிட் ஆகியோர் முதல் டெஸ்டில் பெரிய அளவு தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. கடைசி நேர வீரர்களான சகீர்கான், ஹர்பஜன்சிங் ஆகியோர் சிறப்பாக ஆடிய தால் பலோ ஒன் தவிர்க்கப்பட்டது. இருவரும் ஏற்படுத்திய திருப்புமுனையால் தோல்வியிலிருந்து இந்தியா தப்பித்தது.

மிகப்பெரிய ஓட்ட எண்ணிக்கையை சிரேஷ்ட வீரர்களால் எடுக்க முடியவில்லை. முதல் இன்னிங்ஸில் டிராவிட் 51 ஓட்டங்களுடனும், லக்ஷ்மன் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், டெண்டுல்கர் 13 ஓட்டங்களுடனும், கங்குலி 47 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இரண்டாவது இன்னிங்ஸில் டிராவிட் 5 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். டெண்டுல்கர் 49 ஓட்டங்களும், லக்ஷ்மன் 42 ஓட்டங்களும், கங்குலி 26 ஓட்டங்களும் எடுத்தனர்.

மொகாலி மைதானம் வேகப்பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும். இதனால் கூடுதலாக ஒரு வேகப்பந்துவீச்சாளர் அணியில் சேர்க்கப்படலாம் என்று தெரிகிறது. கும்ப்ளே உடல் தகுதி பெறாவிட்டால் அந்த இடத்தில் ஆர்.பி.சிங் இடம்பெறலாம். டோனி தலைவர் பதவி வகிக்கலாம். ஒருவேளை கும்ப்ளே உடல் தகுதி பெற்றுவிட்டால் சிரேஷ்ட துடுப்பாட்டக்காரர்களில் ஒருவர் நீக்கப்படலாம் என்று தெரிகிறது.

இதற்கிடையே மொகாலியில் கடந்த 2 தினங்களாக நல்லமழை பெய்துவருகிறது. மழையால் போட்டி பாதிக்கப்படவும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிகிறது.

'மேட்ரீட்' டென்னிஸ் தொடர்; மூன்றாவது சுற்றில் நடால்!

மேட்ரிட், ஒக். 16

'மேட்ரிட் மாஸ்டர்ஸ்' டென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

உலகின் முதல் நிலை டென்னிஸ் வீரரான ரபேல் நடால், லாத்வியாவின் எர்னெஸ்ட் குல்பிஸ்ஸுடன் நேற்று முன்தினம் 2ஆவது சுற்று ஆட்டத்தில் மோதினார். 2 மணி நேரம் 22 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ரபேல் நடால் 7-5, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.

முதல் செட் ஆட்டத்தில் குல்பிஸ், 5-5 என்ற புள்ளிகள் கணக்கில் நடாலுக்கு சவால் விடுக்கும் வகையில் விளையாடினார்.

எனினும் சில தவிர்க்கமுடியாத தவறுகள் காரணமாக அவர் நடாலிடம் சரணடைந்தார். 2ஆவது செட் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி வெற்றிபெற்றபோதிலும், 3ஆவது செட்டில் குல்பிஸை நடால் எளிதாக வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தில் குல்பிஸ் சிறப்பாக விளையாடினார் என்றும், குறிப்பாக 2ஆவது செட் ஆட்டம் கடினமாக இருந்தது என்றும் நடால் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து 3ஆவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் மார்டி பிஷ்ஷை 6-7, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்திய பிரான்சின் ரிச்சர்ட் காஸ்கிட்டுடன் ரபேல் நடால் மோதுகின்றார். (ஒ)

சிறந்த டெஸ்ட் வீரர்களில் ஆஸியின் ஹஸி முன்னிலை

டுபாய், ஒக். 16

உலகின் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. அதில் முதலிடத்தை அவுஸ்திரேலிய வீரர் மைக்கல் ஹஸி பெற்றுள்ளார்.

இந்தியாவின் தொடக்க வீரர்கள் விரேந்தர் சேவாக், ராகுல் டிராவிட் ஆகியோர் பின்னடைவு கண்டுள்ளனர். இவர்கள் முறையே 11, 18ஆவது இடங்களுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சச்சின் டெண்டுல்கர் 24ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்திய வீரர்களில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் மட்டுமே முன்னேற்றம் கண்டுள்ளார். அவர் 14ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பெங்களூரில் திங்கட்கிழமை முடிவுற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் 177 ஓட்டங்களைக் குவித்த அவுஸ்திரேலிய வீரர் மைக்கல் ஹஸி பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இவர் முதல் இன்னிங்ஸில் 146 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த டெஸ்ட் போட்டிக்கு முன்பு அவர் 3ஆவது இடத்தில் இருந்தார். இலங்கை வீரர் குமார் சங்கக்கார, மேற்கிந்தியத் தீவுகள் வீரர் சிவநாராயண் சந்தர்போல் ஆகியோருக்குப் பிறகு அவர் இடம்பெற்றிருந்தார்.

இந்தியாவில் சதம் அடித்த அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் 2 இடங்கள் பின்னடைவு பெற்று, 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அதேசமயம் துணைத் தலைவர் மைக்கல் கிளார்க் 15ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். பெங்களூர் டெஸ்ட் போட்டியில் இவர் ஆட்ட நாயகன் விருதைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் இந்திய அணித் தலைவர் அனில் கும்ப்ளே, 8 இடங்கள் பின்னடைவு பெற்று 18ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். பெங்களூர் போட்டியில் 51 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டையும் அவர் கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பகுதிக்கு மருந்துப் பொருள்களை அனுப்புவதற்கு படைத்தரப்பின் அனுமதி தேவை என்கிறது சுகாதார அமைச்சு

கிளிநொச்சி, ஒக்.16

வன்னிப்பெருநிலப்பரப்பில்இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருள்களை அனுப்பும் விட யத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வுக்கும் சுகாதார அமைச்சின் உயரதிகாரி களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற் பட்டுள்ளது.

பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ப தனால் இடம்பெயர்ந்த மக்களுக்கான அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்த போதிலும் அவை இன்னமும் அனுப்பிவைக் கப்படவில்லை என உள்ளூர் தொண்டு நிறு வனங்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பில் உள்ள தலைமையகப் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது உரிய பதில் கிடைக்க வில்லை எனக் கொழும்புத்தகவல்கள்தெரி விக்கின்றன.

அத்துடன் இந்த விடயத்தில் தலை யிட வேண்டாம் என அனைத்துலக செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டதா கவும் படைத்தரப்பின் அனுமதியுடனேயே எதனையும் செய்ய முடியும் எனக் கூறப் பட்டதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரி விக்கின்றன.

இதேவேளை, குறிப்பிட்ட சில மருந் துப் பொருள்களை மாத்திரம் கொண்டு செல்ல முடியும் எனவும் மேலதிகமாக தேவைப்படும் மருந்துப் பொருள்களை அரசாங்கம் அனுப்பிவைக்கும் எனவும் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளி னால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருப் பதாகவும் மற்றுமொரு தகவல் தெரிவிக் கின்றது. (50)

சண்டிலிப்பாயில் 2 வயதுக் குழந்தைகளுக்கு சுகாதாரப் பொதிகள்

நவாலி,ஒக்.16

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரி வில் வசிக்கும் 2 வயதுக்குட்பட்ட 860 வறிய குழந்தைகளுக்கு சுகாதாரப் பொதி கள் வழங்கப்படவுள்ளன.

இன்று வியாழக்கிழமை பிரதேச செய லகத்தில் வைத்து இந்தப் பொதிகள் விநி யோகிக்கப்படவுள்ளன என பிரதேச செய லர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித் தார். (202-100)

கோதுமை மா விநியோகம்

நல்லூர்,ஒக்.16

நீர்வேலி பல நோ.கூ.சங்கம் இன்று வியாழக்கிழமை தொடக்கம் தனது சகல கிளைகளூடாகவும் பாவனையாளரின் தேவைக்கேற்ப கோதுமைமாவைவிநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (202-111)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1028 நீலம்

வெற்றி இலக்கங்கள்

03 10 16 52

கடகம்

14-10-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 400109601 - 400124779

ஜக்பொட் பரிசு ரூபா. 4,058,850/- வெல்லப்படவில்லை

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் எண்ணிக்கை	பரிசுத் தொகை	மொத்தம்
1 இலக்கம்	151,471	20/-	3,029,420/-
2 இலக்கங்கள்	13,848	40/-	553,920/-
1 இல. + லக்கினம்	13,799	60/-	827,940/-
2 இல. + லக்கினம்	1,272	200/-	254,400/-
3 இலக்கங்கள்	368	1000/-	368,000/-
3 இல. + லக்கினம்	32	10,000/-	320,000/-
4 இலக்கங்கள்	1	200,000/-	200,000/-
4 இல. + லக்கினம்	-	4,058,850/-	-
மொத்தம்			5,553,680/-
வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு	5	100,000/-	500,000/-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை	180,796		6,053,680/-

இந்த வெள்ளிக்கிழமை சுபமான பரிசுத் தொகை ரூபா 4,734,950/-

தொடர் இலக்கம் 400120156 க்கு மேற்பட்ட சீரியல் நிற டிக்கட்டுக்கள் 2008 ஒக்டோபர் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வேறு பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

களுத்துறை	400121822-7-30
திருகோணமலை	400115985-9-13
கொழும்பு	400123609-3-08
கம்பஹா	400111325-8-26
கண்டி	400115070-5-32

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் கைலேஸ் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

புலிகளைத் தோல்வியிலிருந்து பாதுகாப்பதற்கு இந்தியாவும் மேற்குலகமும் தலையிடுகின்றன

விமல் வீரவன்ஸ கடுமையாகச் சாடுகின்றார்

கொழும்பு, ஒக்.16

விடுதலைப் புலிகளைத் தோல்வியிலிருந்து பாது காப்பதற்கு இந்தியா உட்பட மேற்குலக நாடுகள் இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு வருகின்றன. ஆனால் இந்தியாவினதோ, வாஷிங்டனினதோ அழுத் தங்களுக்கு அடிபணிந்து விடுதலைப் புலிகளுக்கு எதி ரான யுத்தத்தை நிறுத்த அரசாங்கம் முயலக்கூடாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு யுத்தம் செய்யவே மக்கள் ஆணை வழங்கினார்கள். எனவே அதனை மீறும் அதிகாரம் ஜனா திபதிக்கு கிடையாது என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லையிலுள்ள தேசிய சுதந்திர முன்னணி அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே தேசிய சுதந்திர முன்னணியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; கடந்த காலங்களைப் போன்று இன்றும் விடுதலைப் புலிகளை தோல்வியி லிருந்து பாதுகாப்பதற்காக இந்தியா உட்பட மேற்குலக நாடுகள் தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் கருணாநிதி உட்பட புலி சார்பான அரசியல் கட்சிகள் இலங்கையில் யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனப் போராட்டங்களை நடத்தி மத்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவரை பிரதமர் மன்மோகன்சிங்கின் ஆலோசகர் கே.ஏ.நாராயணன் அழைத்து யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை முன் வைக்குமாறும் தமிழ் சிவிலியன்களைப் பாதுகாக்குமா றும் தெரிவித்துள்ளார்.

இந்தியா அல்ல எந்த நாடு அழுத்தம் கொடுத் தாலும் யுத்தத்தை ஜனாதிபதி யால் நிறுத்த முடியாது. பயங்கர வாதத்தை ஒளிக்கவே மக்கள் ஆணை வழங்கினர். இதனை மீறுவது மக்களின் சுயாதிபத்தி யத்தை மீறும் செயலாகும். விடு தலைப்புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி பயிற்சிகள், பணம் வழங்கி இந்தியாவே போஷித் தது. இறுதியில் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் கொலை செய்தனர். எனவே புலிகளை பாதுகாக்க முனைவ தென்பது மீண்டும் வரலாற்றுத் தவறுகளையே புரிவதாக அமையும். முன்னோக்கிச் செல்லும் யுத் தத்தை பின்னோக்கி முன்னெடுக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளல் ஆகாது. இந்திய அரசாங்கம் இங்கு யுத்தத்தை நிறுத்துவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளைக் கைவிட வேண்டும்- என்றார் (50)

உரும்பிராய் கிழக்கு இலங்கை வங்கிக் கிராம அறிமுகமா இன்று

நாவற்குழி,ஒக்.16

உரும்பிராய் கிழக்கு இலங்கை வங்கிக் கிராமத் தின் அறிமுக எழுச்சி விழாவும், விளையாட்டுப் போட்டியும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காந்திஜி சனசமூக நிலைய விளையாட்டு மை தானத்தில் நடைபெறவுள்ளன.

சென்.மைக்கல் சனசமூக நிலையத் தலைவர் நா.இராசநாயகம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி யின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம்கலந்து கொள்வார். (201-288)

கி.சேவையாளர் கௌரவிப்பு

நாவற்குழி, ஒக்.16

கைதடி கிழக்கு கிராம சேவகர் பிரி வில் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்ற கிராம சேவையா ளர் கே.சிவகுலசிங் கத்தின் சேவை யினைபாராட்டுமுக மாக கௌரவிப்பு விழா நாளை வெள் ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு கைதடி கிழக்கு கிராம சேவகர் அலு வலகத்தில் நடை பெறவுள்ளது.

கைதடி கிழக்கு மத்திய கிராம அபி விருத்தி சங்கமும், கைதடி கிழக்கு மாதர் கிராம அபி விருத்திச் சங்கமும் இணைந்து நடத் தும் இவ்விழாவில் பிரதம விருந்தின ராக தென்மராட் சிப் பிரதேச செய லர் எஸ்.ஸ்ரீனிவா சன் கலந்துகொள் வார். (201-288)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும்
லான்ட் ஓ லேக்ஸ் பாற்பொருள் அபிவிருத்தி லங்கா
நிறுவனமும் இணைந்து நடத்தும்

யாழ்கோவின் பாற்பொருள் தயாரிப்புக்களின்
மீள் அறிமுக நிகழ்வு

கூட்டுறவே நாட்டுயர்வு

எமது பொருளாதாரம் எமது கையில்

திகதி 17.10.2008

நடைபெறும் இடங்கள்:
வட்டுக்கோட்டை,
சுழிபுரம்,
பண்டத்தரிப்பு.

நேரம் மு.ப. 10 மணி முதல் பி.ப. 4 மணி வரை

வாருங்கள்! வாங்குங்கள்!! பயன்பெறுங்கள்!!!
யாழ்கோவின் பாற்பொருள்களைச் சுவையுங்கள்
பரிசுகளை வெல்லுங்கள்!!
தரமான ஊட்டம் நிறைந்த உள்ளூர் பால் உற்பத்திகளை வாங்கி
அருந்தி ஆரோக்கியமாக வாழ்வோம்!
மாவட்ட கால்நடைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை
உயர்த்துவோம்

(79159)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

(ஏ/55446)

யா/புலோலி மெ.மி.த.க.பாடசாலை மாணவன்
செல்வன் செ.சாரங்கன்

2008ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 121 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற செல்வன் ச.பகீரதன், செல்வன் கி.கிருஸ்ணமிதுசன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

(ஏ/55445)

யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை மாணவனும் திரு.திருமதி இரவீந்திரன் - ஜெயசிறீ தம்பதியரின் செல்வப் புதல்வனுமான

செல்வன்
இ.சிந்துஜன்

2008ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகள் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவரை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், கண்ணன் கல்வி நிலைய ஆசிரியை சுமதி ரீச்சர் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மாமார், தாத்தாமார், மாமன்மார், சித்தப்பாமார், மாமிமார், சித்திமார், அத்தான்மார், மச்சான்மார், தம்பி சாருஜன், அண்ணாமார், அக்காமார்.

சகோதரன் - சுதர்சன்
சகோதரி - தரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வேலி தரவைப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம்

நீர்வேலி, ஒக்.16

நீர்வேலி தரவை வயல் நிலங்களில் இம் முறை பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த ஐல வருடங்களாக நெற்செய்கை இன்றி தரிசு நிலங்களாகக் காணப்பட்ட இந்த வயல் பிரதேசங்களை மக்கள் தற் போது பண்படுத்தியும் அவற்றுக்குப் பசளை போட்டும் வருகின்றனர்.

தற்போது பெய்துவரும் பருவ மழையை அடுத்து விவசாயிகள் கடந்த ஓரிரு தினங் களாக நெல் விதைப்புப் பணியில் மும்முர மாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விவசாயிகளுக்குத் தேவையாக விதை நெல்லை விவசாய சம்மேளனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-224)

வலி.கிழக்கில் 40 பேருக்கு சுயதொழிலுக்கு நிதியுதவி

அச்சுவேலி, ஒக்.16

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 40 பேருக்கு சுயதொழில் முயற்சிக்கென நிதி உதவி செய்யப்படவுள்ளது.

வடக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தால் வழங்கப்படும் பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்க ளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 40 பேருக்கே இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்ப டவுள்ள இந்த நிதியில் முதற்கட்டமாக அனைவருக்கும் 7 ஆயிரத்தி 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது என வலி.கிழக்குப் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன் தெரிவித்துள்ளார். (203-11)

வணிகக்கல்வி கருத்தரங்கு

சண்டிலிப்பாய், ஒக்.16

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வணிக மாணவ மன்றத்தினர் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை வலிகாமம் கல்வி வலய வணிகத்துறை சார்ந்த மாணவர்களுக்கு வணிகக் கல்விக் கருத்தரங்கொன்றை நடத் தவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் வணிகக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.துரைராஜசிங்கம் கலந்து கொள்வார். (201)

பரிசளிப்பு விழாக்கள்

கரவெட்டி, ஒக்.16

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி யின் பரிசில் தினம் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் சிவ பாதசுந்தரம் மண்டபத்தில் கல்லூரி அதி பர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங் கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கு வார். (201)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தி யாலயத்தின் பரிசுத்தின விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாட சாலை பிரதான மண்டபத்தில் அதிபர் விமாணிக்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநா யகம் கலந்து கொள்வார். நினைவுப் பேரு ரையை சட்டத்தரணி எம்.றெமீடியஸ் நிகழ்த்துவார். (201)

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத்தின் நடமாடும் விற்பனை சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையத்தின் சேவைகள் விஸ்தரிக்கப்பட் டுள்ளன.

சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் இந்த தகவலைத் தெரிவித்தார்.

மேற்படி சங்கத்தின் நடமாடும் விற்பனை நிலையம் இதுவரை அரச நிறுவனங்களில் நடத்தப்பட்டது. நிறுவனங்களுக்குச் சென்று பணியாளர்களுக்கு சேவையை வழங்கி வந்தது.

தற்போது இந்த சேவை விஸ்தரிக்கப் பட்டு மக்களின் இல்லங்களில் இடம் பெறும் சுபகாரியங்கள் மற்றும் திருமண வைபவங்கள் போன்றவற்றிற்குத் தேவை யான அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் மொத்தமாக விநியோகிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

அத்துடன், பாடசாலை மாணவர்களின் வசதி கருதி அவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணங்கள் மற்றும் அத்தியாவ சியப் பொருள்கள் போன்றவற்றையும் இந் நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம் பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று விநியோகிப்பதற்கும் சங்கம் நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது- என்று அவர் மேலும்கூறினார். (202-224)

அயடீன் கலக்கப்படாத உப்பு குடாநாட்டில் விற்பனையாகிறது

நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.16

குடாநாட்டில் அயடீன் கலக்கப்படாத உப்பு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின் றனர்.

கடும்வெப்பம் காரணமாக கடற்கரைப் பகுதிகளில் பெருமளவில் உப்பு விளைந் திருந்தது.

இதனை அள்ளிச் சென்று பொதி செய்து அயடீன் கலக்காது விற்பனை செய்து வரு வதாகக் கூறப்படுகின்றது.

மண்டான், வல்லை, கோப்பாய்த் தரவை, செம்மணி ஆகிய பகுதிகளிலேயே உப்பு பெருமளவில் இம்முறை விளைந்துள்ளது. ஒரு கிலோ உப்பு 5 ரூபா தொடக்கம் 7 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின் றது.

இதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவிக் கின்றனர். (203-224)

பருவ மழை தீவிரமடைவதற்கு முன்னர் மாநகர சபை வடிகால்கள் புனரமைக்கப்படும்

மாநகர ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.16

பருவமழை தற்போது ஆரம்பித்துள் ளது. இம் மழை தீவிரமடைவதற்கு முன் னர் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வடிகால்களையும் சீர் செய்வ தற்கான நடவடிக்கைகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகர ஆணையாளர் மு.செ.சரவ ணபவ இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

கடந்த ஜனவரிக்குப் பின்னர் ஏற்பட்ட பெருமழை காரணமாக ஆஸ்பத்திரி வீதி யில் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன் பாக உள்ள பெரிய வடிகால் சுவர் இடிந்து விழுந்தது. தற்போது மீண்டும் கட்டிமுடிக் கப்பட்டுள்ளது.

அதேபோல் தேவரிக்குளத்தின் வடக்குப் பகுதியில் உள்ள குளக்கட்டும் அந்த மழை காலத்தில் இடிந்து விழுந்தது. இந்தக் குளத் தின் கட்டுமானமும் பூர்த்தியடைந்துள் ளது.

கஸ்தூரியார் வீதியில் வடிகால் வேலை கள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. கற்குளம் மற்றும் நாவலர் வீதி வடிகால்கள் முடிவடையும் நிலைக்கு வந்துள்ளன. அதே போல் பண்டாரிக்குளத்தின் வடி கால் அமைப்பையும் விரைவில் சீர் செய் வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன - என்றார். (202-302)

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் 220 முதியோருக்கு அ.அட்டை

அச்சுவேலி, ஒக்.16

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 220 முதியோருக்கு அடையாள அட் டைகள் வழங்கப்பட்டுள்ளன.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அரச அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள வசதியாக அவர்களுக்கு முதியோர் அடை யாள அட்டைகள் சகல பிரதேசங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 220 முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன என பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தெரி வித்தார்.

அடையாள அட்டைகள் தேவையானோர் தத்தம் பகுதி கிராம அலுவலர்கள் ஊடாக விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-11)

தவறவிடப்பட்ட உறுதியை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.16

திருகோணமலையிலிருந்து காங்கே சன்துறை நோக்கி பயணம் மேற்கொண்ட போது தவறவிடப்பட்ட காணி உறுதி ஒன்று தெல்லிப்பழை பொலிஸாரால் மல் லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

அலுவலக நேரத்தில் உரியவர்கள் ஆதா ரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பதிவா ளர் அறிவித்துள்ளார். (201)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

கைதடி, நாவற்குழி மற்றும் மட்டுவில் பிரதேசங்களைச் சேர்ந்த பிரஜைகள்குழு உறுப்பினர்க ளுக்கான மாதாந்த ஒன்றுகூடல் அண்மையில் கைதடி சிவில் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரஜைகள்குழு உறுப்பினர்கள் தமது பிரதேச குறை பாடுகளை சிவில் நிர்வாக அதிகாரியிடம் தெரிவிப்பதனை முதலாவது படத்திலும் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரஜைகள்குழு உறுப்பினர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். (288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்மப் பொருள் வெடித்ததில் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 16

வீட்டு வளவினை துப்புரவு செய்து குப்பைகளைதீவைத்துக் கொழுத்தியபோது குப்பைக்குள் இருந்து மர்மப் பொருள் பலமான சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்வயல் பகுதியில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் பரமானந்தசர்மா - சனா தனன் (வயது 34) என்பவர் வயிற்றில் காய டைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டார். (1-207-131)

சைவ பரிபாலன சபையினால் நடத்தப்படும் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஒக்.16

சைவபரிபாலன சபையினால் இந்த ஆண்டு ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் சைவநெறிவுத் தேர்வு அடுத்த மாதம் முதலாம் திகதி சனிக்கிழ மையும் நடைபெறும் என மேற்படி சபை யின் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். (201)

சண்டிலிப்பாய் இந்துவின் பழைய மாணவர் சங்கத்தினர் கற்றல் உபகரணங்கள் வழங்கினர்

சண்டிலிப்பாய், ஒக். 16

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உப கரணங்களை சண்டிலிப்பாய்ப் பகுதி யில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியுள்ளனர்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சண்டி லிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாட சாலை, சண்டிலிப்பாய் அரசினர் தமிழ் கல வன் பாடசாலை ஆகியவற்றின் மாணவர் களுக்கு இவை வழங்கப்பட்டன.

சமூக சேவையாளர் ச.நித்தியானந் தன், ஓய்வு பெற்ற பிரதி அதிபர் ச. கந்தசாமி ஆகியோர் மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்களைப் பகிர்ந்தளித்தனர். (201)

இலவச மருத்துவ முகாம்

வடமராட்சி, ஒக்.16

கரவெட்டிப் பிரதேச செயலகமும், யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களமும் இணைந்து சர்வதேச முதியோர் தினத்தை ஒட்டிய இலவச மருத்துவ முகாம் ஒன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் நடத்தவுள் ளன.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத் துவம், கண்பரிசோதனை, இரத்த அமுக் கப் பரிசோதனை உள்ளிட்ட பல நோய்க ளுக்குச் சிகிச்சைகள் அளிக்கப்படவுள் ளன. (201-236)

பாலர் பாடசாலையின் கூரைத் தகடுகள் விஷமிகளால் சேதம்

யாழ்ப்பாணம், ஒக்.16

சரசாலை மத்தி மயூரி அம்பாள் பாலர் கல் விப் பூங்காவின் கூரைத் தகடுகள் (சீற்று கள்) விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளன. பாலர் கல்வி நிலைய ஆசிரியர் தெரிவித் துள்ளார்.

கூரையில் பொருத்தப்பட்ட அனைத் துச் சீற்றுகளும் சேதமாக்கப்பட்டுள்ள மையால் பாலர் கல்வி நிலையத்தில் கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டது. இது தொடர்பாக சாவகச் சேரி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (201-136)

நூல் வெளியீட்டு விழா

கரவெட்டி, ஒக்.16

கவிஞர் பொலிகை ச.திருப்பதி எழு திய 'காதோடு வாய் புதைத்து.....!' என் னும் கவிதைநூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொற்றாவத்தை அ.மி.த.க. பாட சாலையில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் பா.வெற்றிவேல் தலைமையில் நடைபெறும். விழாவில் வெளியீட்டுரையை கலாபூஷணம் தெணி யான் நிகழ்த்துவார். நூலின் முதற் பிர தியை வடமராட்சி பிரதிக்கல்விப் பணிப் பாளர் சி.புஸ்பலிங்கம் பெற்றுக் கொள் வார்.

மதிப்பீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் கவிஞர் வே.இளைய குட்டி, யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையா ளர் கலாநிதி த.கலாமணி ஆகியோர் நிகழ்த் துவர். (201-70)

இலட்சார்ச்சனை

வடமராட்சி தென்புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனை எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடை பெறவுள்ளது.

சிவஸ்ரீ எஸ்.மகாலிங்கக்குருக்கள் பிரதம குருவாக இருந்து இலட்சார்ச்சனையை நடத்தி வைப்பார். (201-136)

மகா ஒயாவில் 'பீல்ட்' பைக் குறுப் மீது புலிகளின் கொமாண்டோ அணி தாக்குதல்

இரண்டு படையினர் பலி

கொழும்பு,ஒக்.16

அம்பாறை மாவட்ட எல்லைப் பகுதியான மகா ஓயாவில் செவ்வாயன்று விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் படையினர் இருவர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மகா ஓயாவில் உள்ள தனின்ன என்ற இடத்தில் உள்ள மாந்தி ஆற்றுக்கு கிழக்குத் திசைப் பக்கமாக அமைந்திருக்கும் வீதியில் படையினரின் 'பீல்ட்'பைக் மோட்டார் சைக்கிள் குறுப் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. இந்த 'பீல்ட்'பைக் மோட்டார் சைக்கிள் குறுப் மீது பிற்பகல் 3 மணியளவில் புலிகளின் கொமாண்டோ அணி பதுங்கியிருந்து தாக்குதலை நடத்தியது.

அதன்போது இரண்டு படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களின் மோட்டார் சைக்கிளும் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

தாக்குதல் நடத்திய புலிகளின் கொமாண்டோ அணி சேதங்கள் ஏதும் இன்றி தளம் திரும்பியிருக்கிறது - என்று புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

(சி)

பொரலஸ்கமுவ தற்கொலைதாரி வெள்ளவத்தையில் வசித்தவராம்!

வாடகைக்கு வீடு கொடுத்தவர் குடும்பத்தோடு கைது

கொழும்பு,ஒக்.16

பொரலஸ்கமுவவில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் வாகனத் தொடரணியை இலக்குவைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தினார் என்று நம்பப்படும் பெண், முன்னர் வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்தார் என்று கூறியிருக்கும் பொலிஸார், அந்த வீட்டின் உரிமையாளர், அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோரைக் கைதுசெய்தனர்.

''புற்றுநோய்க்கு அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு என்று கூறி குறித்த வீட்டில் இரண்டுபேர் முதலில் வாடகைக்குத் தங்கியிருந்தனர். அவர்கள் சென்ற பின்னர் மீண்டும் அந்த வீட்டில் தாயும் மகளுமாக இருவர் வந்து தங்கியிருந்தனர். தாய் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி வீட்டைவிட்டு வெளியேறியிருந்தார். அதன் பின்னர் கடந்த 9 ஆம் திகதி - குண்டுவெடிப்பு நடந்த அன்று - குறித்த பெண் வீட்டு உரியாளரிடம் வாடகைப்பணத்தையும் வீட்டுத் திறப்பையும் கையளித்துவிட்டு வெளியேறியுள்ளார்.'' என்று தமக்கு ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

பாராட்டி வாழ்த்தும் பிறந்தநாள் வாழ்த்தும்

2008 ஆம் ஆண்டு தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் 121 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/ ஏழாலை சைவ சன்மார்க்கவித்தியாலய மாணவனும் திரு.திருமதி கலாநந்தராசன் தம்பதியினரின் புதல்வனுமாகிய

யதுர்சன்

மேன்மேலும் சிறப்புற வாழ்த்துவதுடன் அவரின் பெறுபேற்றுக்கு உதவிய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம். எதிர்வரும் 22.11.2008 இல் தமது 10 ஆவது பிறந்த நாளையும் கொண்டாட இருக்கும் இவரை மேலும் வாழ்த்துகின்றோம்.

ஏழாலை கிழக்கு, களபாவோடை. (79228)

வாழ்த்துபவர்: அத்தை: பரமேஸ்வரி (பிள்ளை).

ஈரவிழிகளுடன் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

கந்தையா கனகசிங்கம்

திதி: துதியை(16.10.2008)

மலர்வு : 26.05.1957

உதிர்வு : 08.10.2006

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்ந்து எமை விட்டுப்
பிரிந்து நித்தமும் என்முன்னே
நிழற்படமாய் காட்சி கொடுக்கின்றீர்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

ஏழாலை கிழக்கு, களபாவோடை. (79229)

மனைவி-பரமேஸ்வரி (பிள்ளை)

இப்போது புதிய சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்துகிறது

'இலங்கையின் அதிசிறந்த நுகர்வோர் சேவைகளை வழங்கும் வங்கி' - ஏசியன் பேங்கர்

சர்வதேசத்தர விருதுபெற்ற வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி,

ஆகக்குறைந்த ரூபா 50,000 ஆரம்ப வைப்புக்கு 12.5%* மும்

ஆகக்குறைந்த ரூபா 100,000 ஆரம்ப வைப்புக்கு 14%** மும்

வருடாந்த வட்டியாக வழங்குகிறது. அத்துடன் நீங்கள்

எத்தனை தடவைகளேனும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

- இலவச இணைய வங்கிச்சேவை
- இலவச SMS வங்கிச்சேவை
- 90% வரை தூரித கடன் வசதி
- இலவச ATM அட்டை

அதிசிறந்ததிலிருந்தே அதிசிறந்ததைப் பெறமுடியும்.

கெபிடல் சேமிப்புக் கணக்குகள் பத்தும் விமன சீட்டிழுப்பிற்கு தகுதி பெறாது.
HNB, ∴பிச் ரேட்டிங் லங்காவினால் AA⁻ (lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.

* 12.5% வருடாந்த விளைவு வீதம் 13.24%
** 14% வருடாந்த விளைவு வீதம் 14.93%

HNB CAPITAL SAVINGS

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளன்

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி

பாக்கியம் தம்பிராசா

அன்னை மடியில் 20.04.1923

ஆண்டவன் அடியில் 16.09.2008

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து
பாசத்துடன் வளர்த்தாய் பாரினிலே
அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இலக்கணமாய் இருந்து
எம்மையெல்லாம் வழி நடத்திய அம்மாவே!
என்றும் உங்கள் நினைவுகளுடன்

16.09.2008 செவ்வாய்கிழமை காலமான எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று(16.10.2008) வியாழக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்துகொண்டுஅன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சின்னக்கோவில் தெரு, கோப்பாய் தெற்கு,கோப்பாய். (79233)

உங்களது பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

நெஞ்சை விட்டகலாத 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் **தவமணி வன்னியசிங்கம்**

திதி: துதியை (16.10.2008)

மலர்வு 04.09.1938

உதிர்வு 08.10.2006

பாரினில் நாம் கண்ட அன்புத் தெய்வமே, தூயவரே எம்மை ஏங்கவைத்து சென்றீரே!காலமும் சுழன்று ஈராண்டுகள் ஆனாலும் எம் மனதில்என்றும் கூடர் வீசி இருப்பீர் அம்மா.

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

555, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (79239)

ஈஸ்வரஜனனி (மகள்), சகோதரர்கள், பெறாமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா /சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதி அதிபர் (நிர்வாகம்)

திருமிகு.கனகசபை லோகநாதன் அவர்களின்

மணிவிழாவும் சேவை நயப்பும்

சிறப்பு மலர் - 16.10.2008



ஆயிரம் பிறை கண்டு வாழ்க

தென்மராட்சிப் பகுதியின கலங்கரை விளக் காகத் திகழும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மிக நீண்ட காலமாக ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றிய திரு.க.லோகநாதன் இன்று ஓய்வு பெறுகின்றார். அன்னாருடைய சேவைக்காலத்தில் இந்துக் கல்லூரி கணிதத் துறைக் கல்வியில் சிறந்து விளங்கியது என்று சொன் னால் மிகையாகாது.

தான் பெற்ற கல்வியை மாணவச் சமூகம் பெற் றுக் கொள்ளவேண்டும் என்ற ஒரே குறிக் கோளுடன் அவர்களுடைய துன்ப துயரங்களிலெல்லாம் தானும் பங்கு கொண்டு விருப்புடன் கல்வி கற்பித்த பெருமைக்குரியவர்.

ஆசிரியர் அவர்களின் ஓய்வுக்காலம் மனைவி, மக்களுடன் அமைதியும் இனிமையும் பொருந்தி ஆயிரம் பிறைகண்டு வளமுடன் வாழ எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றேன்.

கலாபூசணம், வேதாகமசோதிடபூசணம், சி.சிதம்பரநாதக்குருக்கள், திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்.

சிறந்த நிர்வாகி

க.லோகநாதன் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 23.03.1978 இல் ஒரு கணித ஆசி ரியராக இணைந்து கொண்டார். அதற்கு முன் 8 வருடங்கள் இலங்கையின் பலபாகங்களிலும் உள்ள பாடசாலைகளில் ஆசிரியராகச் செயற்பட் டார். இவர் ஒரு பயிற்றப்பட்ட கணித ஆசிரியர். இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 30 வரு டங்களும் 6 மாதங்களும் கடமையாற்றி 16.10.2008 இல் ஓய்வு பெறுகின்றார்.

மாணவர் மத்தியில் ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றை வளர்த் தவர். ஆசிரியருடனும் மாணவருடனும் அன்பாகப் பழகுவார். அதில் ஒரு புன்சிரிப்பும் உண்டு. அவர் பாடசாலையில் கற்பித்தலில் மட்டும் செயற்படவில்லை. பாடசாலையில் நடைபெறுகின்ற பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி, கூட்டுறவுக் கடனுதவிச் சங்கம் ஆகியவற்றில் அர்ப்பணிப்புடன் பங்கு கொண்டவர். சிறந்த ஒரு நிர்வாகி.

பாடசாலையின் வளர்ச்சிக்கு உயர்ந்த அர்ப்பணிப்புடன் செய லாற்றி இன்று ஓய்வு பெறுகிறார். இவருடைய ஓய்வுகாலம் வளமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

க.மகேஸ்வரன், முன்னை நாள் அதிபர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தன்னலமற்ற கல்விப் பணியாளன்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 30 வரு டங்களுக்கு மேலாகவும் ஆசிரிய சேவையில் 38 ஆண்டுகளாகவும் கல்விப் பணியாற்றி 16.10.2008 அன்று மணி விழாக்காணும் திரு.கனகசபை லோகநாதன் அவர்களை வாழ்த்துவதில் நான் மட்டில்லாத மகிழ்ச்சியடைகின்றேன்.

மணி விழா நாயகனுடன் நான் ஆசிரிய கலா சாலையில் ஒன்றாகக் கல்வி பயின்றேன். பின்னர் நாமிருவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஒன்றாகக் கல்வி கற்பித்தோம். நான் இந்துக் கல்லூரியில் அதிபரா கக் கடமையாற்றிய காலத்தில் அவரும் என்னுடன் கூடவே பணி புரிந்தார். இத்தொடர்புகளினால் திரு.லோகநாதன் அவர்களை நான் நன்கு அறிந்துள்ளேன். தன்னலமற்ற ஒரு கல்விப் பணியாளன்.

இன்று அவர் கல்லூரியின் பிரதி அதிபர் பதவியை வறிதாக்கி ஓய்வு பெறுவதன் மூலம் கல்லூரியில் ஒரு பாரிய இடைவெளி ஏற்பட வாய்ப்புள்ளது.

ஓய்வு என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். நிறையச் சேவை செய்தவர்களுக்கு ஓய்வு அவசியம். இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமையவும், அவர் தன் மனைவி, பிள்ளைகளுடன் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழவும், அவர்கள் அனைவருக்கும் சகல செள பாக்கியங்களும் கிடைக்கவும் இறைவன் துணை புரிய வேண்டு மெனப் பிரார்த்தித்து எனது நல்லாசியைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.இ.கயிலைநாதன், முன்னை நாள் அதிபர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சிறந்த அர்ப்பணிப்பாளர்

இந்துவில் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையில் தலை சிறந்த கணித ஆசிரியராக விளங்கினார். பின்பு பகுதித் தலைவராகவும் இறுதியில் பிரதி அதிபராகவும் நிர்வாகப் பகுதியிலும் சேவையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

சேவைக் காலத்தில் இந்துவின் சிக்கனக் கடனுதவிச் சங்கத்தின் பொருளாளராக தனக் குக் கொடுக்கப்பட்ட பொறுப்பினைத் திறமையா கக் கையாண்டுள்ளார்.

இவர் சேவைக் காலத்தில் எமது கல்லூரியின் முன்னேற்றத் திற்கு அரும்பணியாற்றியுள்ளார். குறிப்பாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே நல்ல தொடர்பினை ஏற்படுத்த வல்லவராக இருந்துள்ளார். இவரது நேர்மையான, துணிச் சலான, ஆரவாரமில்லாத செயற்பாடுகள் ஓய்வு பெற்றபின்னும் வாழ் வின் மிகுதிக் காலத்திற்கு உறுதுணையாக இருக்கும் எனவும், எமது கல்லூரியின் வருங்காலச் செயற்பாடுகளில் இவரது சீரிய பங்களிப் பினை இக்கல்லூரிச் சமூகம் எதிர்பார்த்து நிற்கும் எனவும் நம்புகின் றேன்.

ஆசிரியரின் சேவையினால் உயர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில், **ம.குமாரவேல்ராசா, செயலாளர், பா.அ.சங்கம், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.**

மாணவர் உள்ளங்களை வென்றவர்

அன்பாலும் பணபாலும் ஆளுமையாலும் அனைவர் மனங்களையும் வெல்ல முடியும் என்ப தற்கு உதாரண புருஷராகத் திகழ்ந்தவர் எங்கள் கல்லூரிப் பிரதி அதிபர் திரு. கனகசபை லோக நாதன் அவர்கள். மாணவர்களை அன்பால் அர வணைத்து தனது பண்பாலும் ஆளுமையாலும் வழி காட்டி மாணவர்களை உயர்நிலைக்கு உயர்த்திய வர். கல்லூரி நிர்வாகத்தைத் திறம்பட நடத்திய வர்.

மாணவ முதல்வர் சபையின் பொறுப்பாசிரியராக இருந்து எமையெல்லாம் சிறந்த முறையில் தூர நோக்குடன் வழி நடத்தியவர். பல மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர். இவரது ஓய்வு காலம் சிறக்கவும் பலகாலம் நோய் நொடியின்றி வாழவும் விநாயக் பெரு மானைப் பிரார்த்தித்து எங்கள் பிரதி அதிபர் அவர்களின் ஆசி வேண்டி நிற்கின்றோம்.

செல்வன்.த.சர்மிளன், சிரேஷ்ட மாணவ முதல்வர், மாணவ முதல்வர் சபை.

மணிவிழா நாயகனின் வாழ்வியற் பதிவுகள்

பெயர்	: திரு.கனகசபை லோகநாதன்
பிறந்த இடம்	: மட்டுவில்
பிறந்த திகதி	: 16.10.1948
தந்தை	: திரு.இராஜசிங்கம் கனகசபை
தாய்	: திருமதி கனகசபை பாலாம்பிகை
மனைவி	: திருமதி.புனிதமலர் லோகநாதன் (ஆசிரியர் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)
பிள்ளைகள்	: லோ.கபாலினி, லோ.பவதினி
ஆரம்பக்கல்வி	: யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி:	யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
உயர்கல்வி	: யா/இந்துக்கல்லூரி

சேவை விவரம்

1.யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் - 01.10.1970-13.02.1971

2.யா/பலாலி ஆசிரியர் கலாசாலை - 14.02.1971 -31.12.1972

3.நு/பூண்டுலோயா தமிழ் ம.வி - 01.01.1973-09.01.1973

4.நு/ றம்பொடை தமிழ் ம.வி. - 10.01.1973 -31.10.1977

5.யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம் - 01.11.1977-31.12.1977

6.நு/றம்பொடை தமிழ் ம.வி. - 01.01.1978-23.03.1978

7.யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் - 24.03.1978 -28.03.1978

8.யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி -29.03.1978 -16.10.2008

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் வகித்த பதவிகள்

- ✱ஆசிரியர்
- ✱பகுதித் தலைவர்
- ✱பாட இணைப்பாளர்
- ✱உதவி அதிபர்
- ✱பிரதி அதிபர்

சிறந்த பண்புடையாளன்

திரு.க.லோகநாதன் அவர்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கணித ஆசிரியராகவும், தொடர்ந்து பகுதித் தலை வராகவும், பிரதி அதிபராகவும் சேவையாற்றி தனது அறுபதாவது அகவையில் சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார். தமது சேவைக் காலத்தில் மாணவர் களுக்கு கணித பாடத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தி, கணித அறிவை வளர்க்கப்பாடுபட்ட நல்லாசான் ஆவார். மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனை களை அன்பானவும், கண்டிப்பாகவும் வழங்கி அவர்களை நல்வழிப்படுத் துவதில் முக்கிய பங்காற்றியவர். தனது அன்பாலும், பண்பாலும் சக ஆசிரியர்களிடத்தும், பெற்றோர்களிடத்தும் தனக்கென ஒரு கௌரவ இடம் பெற்றவர். மொத்தமாக இந்துக் கல்லூரிச் சமூகம் மேன்மை பெற சேவையாற்றிய நற்பண்பாளனை தனது ஓய்வு காலத்தில் வளம் பல பெற்று மகிழ்வுடன், நல்வாழ்வு வாழ இறைஆசி வேண்டி வாழ்த்து கிறேன்.

திரு.இ.இராஜ்செல்வம், தலைவர், ஆசிரிய சகோதரத்துவம், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

தூர நோக்குடையவர்

திரு. கனகசபை லோகநாதன் அவர்கள் 38 வருட கல்விப் பணியில், முப்பது வருடங்கள் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கணித பாட ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். சாவகச்சேரி இந்துக் கல்லூரி கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கத்தில் 1989 இல் இருந்து 2007 வரை பொருளா ளராகச் செயற்பட்டு சங்கத்தின் வளர்ச்சிக்கும், அங்கத்தவர்களின் கூட்டுறவுக்கும் அயராது உழைத்து அரும்பணியாற் றியவர். எந்தப் பிரச்சினையையும் இன்முகத்துடன் எதிர் கொண்டு ஆழமாகச் சிந்தித்து தீர்வு காணும் திறனும், எல்லோருடனும் அன்போடு அமைதியாகப் பழகும் சுபாவமும், நிர்வாகத் திறனும் மிக்க தூரநோக்கு டையவர். அவர்களது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வேண்டுமென கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம் சார்பாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

திரு.பூ.செல்வநாயகம், தலைவர், கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

சிறந்த சேவையாளர்

முப்பத்தெட்டு ஆண்டு கால ஆசிரிய சேவை யில் இருந்து ஓய்வுபெறும் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் திரு.க. லோகநாதன் அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.லோகநாதன் கணித ஆசிரியராகத் தனது சேவையை ஆரம்பித்து பாட இணைப் பாளராக, பகுதித் தலைவராக, உதவி அதிப ராக, பிரதி அதிபராக இருந்து 16.10.2008 இல் ஓய்வு பெறுகின்றார். தனது சேவையில் முப்பது ஆண்டுகள் இந்துக் கல்லூரியில் சேவை யாற்றியுள்ளார். மாணவர் விரும்பும் நல்ல கணித ஆசானாகச் சேவையாற்றியுள்ளார். மாணவர் மட்டுமல்லாது பெற்றோர், சக ஆசிரியர்களாலும் நன்கு மதிக்கப்பட்ட ஒருவராகத் தன் சேவைக் காலத்தில் திகழ்ந்துள்ளார். அவரது ஓய்வு காலம் சிறக்கவும் குடும்பத்தாருடன் மகிழ்வுடன் நீண்டகாலம் வாழவும் இறைவன் துணை நிற்க வேண்டிவாழ்த்துகின்றேன்.

நா.சத்தியநாதன், கோட்டக்கல்வி அலுவலர்,சாவகச்சேரி.

ஆளுமை மிக்க பிரதி அதிபர்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கணிதத்துறை வளர்ச்சிக்கு திரு.க.லோக நாதன் அவர்கள் முப்பது வருடகாலம் அளப் பரிய சேவையாற்றியுள்ளார். புன்னகை பூத்த முகம், எவரையும் தன்பால் கவர்ந்திழுக்கும் ஆளுமை, எடுத்த கருமத்தைத் திருப்திகரமாக முடிக்கும் திறன், நிறைந்த பொறுமை, பிரச்சினை களுக்கு தீர்வு காணப்படக் கூடிய அறிவு முதிர்வு ஆகிய பண்புகள் நிறைந்தவர் தான் எமது பிரதி அதிபர்.

கல்லூரியின் சிக்கனக் கடனுதவிச் சங்கத்தின் பொருளாள ராக இருந்து அதன் வளர்ச்சிக்குத் துணை புரிந்துள்ளார். தன்னு டைய முப்பத்தெட்டு வருட கால கல்விச் சேவையை நிறைவு செய்து மணி விழாக் காணும் பிரதி அதிபரது ஓய்வு காலம் சந்தோசமாக அமையவும் நீண்ட ஆயுளுடனும், நிறைந்த செல்வத்துடனும் குடும் பத்தினருடன் இன்பமாக வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

அ.கயிலாயபிள்ளை கல்லூரி முதல்வர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

அறிவுப் பசியை நீக்கிய ஆசான்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் (நிர்வாகம்) க.லோகநாதன் அவர்கள் இக்கல்லூரியில் சிறந்த கணித பாட ஆசா னாகக் கடந்த முன்று தசாப்தங்கள் கடமை யாற்றியுள்ளார். தென்மராட்சிப் பிரதேசத்தி லிருந்து அதிகளவு மருத்துவர்கள், பொறியிய லாளர்கள், கணக்காளர்கள், ஆசிரியர்கள், தொழில் வல்லுனர்கள், ஏனையதுறை சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உருவாக்கத்திற்கு எமது ஆசான் இடைநிலை வகுப்புக்களில் போதித்த கணித பாட அறிவு பெரும் துணையாக அமைந்துள்ளது.

பெரும் விருட்சமாகிய சாவகச்சேரி இந்து அன்னை அதிகளவு ஏழ்மைச் சிறார்கள் கல்வி கற்கும் பெரிய பாடசாலையாகும். இந்த வகையில் ஏழ்மைச் சிறார்களின் அறிவுப் பசியை நீக்கியமைக்கு எமது ஆசான் ஆற்றிய சேவை மகத்தானதாகும். எமது கல்லூரி தேசிய பாடசாலை என்ற அந்தஸ்தை அடைவதற்கு எமது ஆசி ரியர் அர்ப்பணிப்பான சேவையை ஆற்றியுள்ளார்.

எமது அன்புக்குரிய பிரதி அதிபரின் ஓய்வு காலம் ஆரோக் கியம் மிக்கதாக அமைய வாழ்த்துகின்றோம்.

திரு.வி.கந்தசாமி, பிரதி அதிபர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

செயல் வீரர்



ஆசிரியர் திரு.க.லோகநாதன் அவர்கள் தனது கல்விச் சேவையின் முப்பது ஆண்டுக ளுக்கு மேலான காலப்பகுதியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்வுக்காக அர்ப்பணித்த செயல்வீரர். மாணவர்களை அன்புடன் அணுகி தனது கணித பாடத்தைப் புகட்டியவர். அது மட்டுமல்ல இவர் உப அதிபராக, பிரதி அதிப ராகக் கடமை ஏற்றதன் பின் இவரது நிர்வாகத் திறனையும் நாம் மெச்சும் அளவுக்கு வெளிப்படுத்தியிருந்தார். எதையும் நிதானமாக கோபமடையாது அணுகும் ஆற்றல் இவரிடம் காணப்பட்ட ஒரு மேம்பட்ட பண்பாகும்.

இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைந்து இந்துவின் வளர்ச்சிப் பாதையில் பல்லாண்டுகாலம் உறுதுணையாக இருந் திட வாழ்த்துகின்றேன்.

திரு.செ.செந்தூரன், செயலாளர், பழைய மாணவர் சங்கம், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பண்பு மிக்கவர்

திரு.க.லோகநாதன் அவர்கள் சகலரு டனும் மிகவும் அடக்கமாகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவது அவரது இயல்பான குணமாகும். இச் சிறப்புத் தன்மையால் எல் லோரது உள்ளங்களையும் கவர்ந்த ஒருவர் ஆவார்.

அவர் தனது 38 வருட கல்விச் சேவை யில் கணிதத்தை மாணவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியவாறு கற்பித்து மாணவர்களது உள்ளத்தில் அழியா இடம் பெற்றவர்.

இவர் தனது ஓய்வு காலத்தில் எல்லாம் வல்ல இறைவன் அருளால் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

திரு.க.அருட்ஜோதிவர்ணன், பகுதித் தலைவர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

அனுசரணை

ஆசிரிய சகோதரத்துவம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
சிக்கனக் கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(சி/ 555435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கல்விமுறை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு கல்வியறிவு அவசியமாகின்றது. அந்த வகையில் இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையானது இலங்கைக் கல்வி முறை இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழி சமைக்கின்றது. அதாவது 1948 இல் C.W.W. கன்னங்கராவினால் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டதனால் அனைவரும் கல்வியைப் பெற முடிகின்றது. இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி முறையானது ஓர் அடித்தளமாக அமைகின்றது. அதாவது ஏனைய நாடுகளைப் போன்று கல்விச் செயற்பாட்டிற்கான செலவுகள் எமது நாட்டில் இல்லை. இதனால் மாணவர்கள் தொடர்ந்து கல்வியைப் பெறுவதற்கு வாய்ப்பாக அமைகிறது. அதுமட்டுமன்றிப் போர்க்காலங்களில் ஏனைய தேவைகள் நிறைவு செய்யப்படாவிட்டாலும் கல்வித் தேவையானது இலவசக்கல்வி ஆகையால் குறைவின்றி நிறைவு செய்யக் கூடிய வகையில் காணப்படுகின்றது. எனவே சமமாக அனைவரும் கல்வியைப்பெற முடிகின்றது. கல்விச் செலவின்மையால் நாட்டின் மீது கவனம் செலுத்தும் மாணவர்கள் கல்வியில் அக்கறையுடையவர்களாகவும், பற்றுறுதி கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். கல்வி கற்பதில் ஏழை, பணக்காரர் என்ற பேதமின்றிச் சம வாய்ப்பு வழங்கப்பட்டதோடு கல்வியறிவிற் கேற்ப தொழில் வாய்ப்பும் வருமானமும் பெறமுடிகிறது.

இவ்வாறு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி முறையானது இளைஞர்களுக்கு ஓர் அடித்தளமாகவும், அத்திபாரமாகவும் காணப்படுகின்றது.

இ.ரிஷிதா, A/L கலைப்பிரிவு 2009, நயினாதீவு ம.வி.

தெரிந்த உலகில் தெரியாதவைகள்

★ வரிக்குதிரையின் நிறம் வெள்ளை, கறுத்த வரிகளோடு இருக்கிறது. எல்லா வரிக்குதிரைகளும் மாறுபடும் வரிகளைக் கொண்டவை.

★ சூரிய மண்டலத்தின் எல்லாக் கிரகங்களும் கடிகாரத்தின் போக்கிற்கு எதிராக இடஞ்சுழியாகவே சுற்றுகின்றன. வீனஸ் மட்டும் வலஞ்சுழியாகவே சுற்றுகின்றது.

★ ஆறுகால் கொண்ட உயிர்களில் வேகமானது கரப்பான் பூச்சி. இதனால் ஒரு விநாடியில் ஒரு மீற்றர் தூரத்தைத் தாண்டமுடியும்.

★ ஆங்கிலத்தில் அமைதியைக் குறிக்கும் "Silent" என்ற வார்த்தையும், கேட்கச் சொல்லும் "listen" என்ற வார்த்தையும் ஒரே எழுத்துக்கள் கொண்டவை.

★ முயலும் கிளியும் தலையைத் திருப்பாமலே தமக்குப் பின்புறமாக நடப்பதைப் பார்க்கக் கூடியவை.

★ பூச்சிகள் சத்தமிடுவதில்லை. நுளம்பு, தேனீ எல்லாவற்றிலும் இருந்து வரும் சத்தம் அவை வேகமாக சிறகடிப்பதாலேயே வருகிறது.

★ பூமிய இலக்கத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியது இந்தியா. இதனை ஆரியப்பட்டா அறிமுகம் செய்தார்.

★ உங்கள் முழங்கையை உங்கள் மூக்கால் தொடவே முடியாது! (முடிந்தால் தொட்டுப் பாருங்களேன்!)

இ.அனுஜா, தரம் 7.

தேவதை

நீதான்
எனக்குள் - ஆயிரம்
விண்மீன்களை
வீசியெறிந்துவிட்டுச் சென்றவள்

உனது கண்கள்தான்
எனக்குள்
ஆயிரம் கவிதைகளை
எழுதிவிட்டுச் சென்றன

உனது புன்னகைதான்
எனக்குள்
ஆயிரம் ஓவியங்களை
வரைந்துவிட்டுச் சென்றது

உனது காற்தடங்கள்தான்
எனது நெஞ்சத்தில்
காதற் தடங்களாக
பதிந்துள்ளன!

மட்டுவில் தி.கோபிநாத்.

கேள்விக்கு என்ன பதில்? -06

அனுப்பியவர்: சி.கிஷானுகா, சுன்னாகம்.

ஒருவரிடம் 20 அப்பங்கள் உள்ளன. ஒரு ஆண் நான்கு அப்பங்கள் வீதமும் (4) ஒரு பெண் பாதி அப்பம் வீதமும் ஒரு குழந்தை கால்வாசி அப்பம் வீதமும் சாப்பிடக் கொடுத்து அந்த அப்பங்களை இருபது பேருக்குப் பங்கிட வேண்டும். அது எப்படி?

(சரியான விடையை 19.10.2008இற்கு முன்னர் அனுப்புங்கள்)

கேள்விக்கு என்ன பதில் - 5இன் விடை

நாங்களும்	-	36
ஒரு பங்கு	-	36
1/2 பங்கு	-	18
1/4 பங்கு	-	9
ஒருவர்	-	1
		100

விடை: 36 குருவிகள்

சரியான விடை எழுதிய வாசகர்கள்

1. கல்யாணி விஜயகுமார், கல்லியங்காடு.
2. சி.ரஜீபன், யாழ்.இந்துக் கல்லூரி.
3. க.ஜரிகரன், மன்கும்பான்.
4. செ.கஜீவன், யாழ்.மத்திய கல்லூரி.
5. க.பொன்னுக்கோன், கைதடி.
6. வீ.ஜெனனி, நாவற்குழி.
7. உதயணன் கௌதமன், வேலணை மேற்கு, நயினாதீவு மகாவித்தியாலயம்.
8. அம்பன் அனோஜ், செல்வச்சன்னிதி வித்தியாலயம்.
9. பி.டிலாக்சன், உயர்தரப்பிரிவு, பொ.க.க. வித்தியாலயம்.
10. சண்முகலிங்கம் ஜெனிஷா, வதிரி, காரைவீடு.
11. க.துகந்தி, துன்னாலை.
12. கு.தனுசங்கினி, இணுவில் மத்திய கல்லூரி.
13. சி.மனிவண்ணன், இணுவில் மத்திய கல்லூரி.
14. சா.இளைப்பிரியா, இணுவில் மத்திய கல்லூரி.
15. ஏ.கபிந்தன், அரியாலை.
16. க.அனுஜன், யாழ்.இந்துக் கல்லூரி.
17. தே.தனோஜன், அரியாலை.
18. பி.கதாகரன், காரைநகர்.
19. பி.ஷர்மிளன், அளவெட்டி.
20. எம்.ஜோன்பிரியந்த், செபஸ்தியன் கல்லூரி.
21. கே.தரன், மன்கும்பான்.
22. பொ.திலகராஜ், கலையரசி, கொக்குவில்.
23. புவனேந்திரன் பெனற், மீசாலை விசுவமடு மகாவித்தியாலயம்.
24. வி.கீரத், புனித பத்திரிசியார் கல்லூரி.
25. இ.ஜனகபாந்தன், அளவெட்டி.
26. க.ரஜீவன், காரைநகர்.
27. அன்பரசி அமலதாஸ், கல்முனை கொத்மலை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.
28. ம.பாதுசங்கர், நாகர்கோவில்.
29. இ.சிவபாலன், பாலக்காடு.
30. ம.அனிதா, சங்கானை.
31. க.சிந்துஜன், ஆனைப்பந்தி.
32. சு.காயத்திரி, சித்தன்கேணி.
33. ப.நம்பன், கோண்டாவில் மேற்கு.

காத்திருப்பு...

பல்கலையும் முடித்து
பல தபால்கள் அனுப்பி
பரீட்சையும் பல எழுதி
பதிலுக்காய் காத்திருக்கிறோம்...
பல்வாண்டுகள் ஆகியும்
பதில்கள் ஏதும் எமக்கில்லை
பணிதான் கிடைக்குமா?

தர்க்கபரி அராலி

இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் **'இளவல்கள் வட்டம்'** என்ற புதிய பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :.....
முகவரி :.....
:.....
.....
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிந்தனைக்குச் சில துளிகள்

★ வளையாத பாதையில் நடைபோடு, வெற்றி உன்பாதையில் அணிவகுக்கும்.
★ வெற்றியின் சிகரத்தை அடைந்திட வேண்டுமெனில் முயற்சிகளை அத்திவாரமிட்டுக் கொள்.
★ பல தீபங்கள் உன்னால்தான் ஒளிருமென்றால் தீக்குச்சியாக இருக்க அச்சம் கொள்ளாதே.
★ மரணத்தைக் கண்டு பயப்படுவதுபோல் பாவங்களைக் கண்டு விலகிக்கொள்.
★ முயற்சி, பயிற்சி இவையே உன்வாழ்க்கைக்கு உயர்ச்சி. அதுவே நாளைக்குப் புகழ்ச்சி.
★ தப்புக் கணக்குகளை நீ அதிகம் போடாதே ஏனெனில் உன் வாழ்வே தப்பாகிப் போய்விடும்.

யே.ஜரீனா, யா/சென்.சார்ல்ஸ் ம.வி.

பிள்ளைகளுக்குச் செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்வானதாக்குவோம்

அன்புப் பரிமாற்றம் என்பது செவிசாய்த்தல், பதிலளித்தல், சுட்டிக்காட்டல், அரவணைத்தல், பிரச்சினையின் ஆழத்தையும் ஆணிவேரையும் கண்டுபிடிக்க உதவுதல், வளர்கின்ற மொழி பேசுதல் என்பவற்றின் மூலம் பெற்றோரும், பெரியோரும் தம் பிள்ளைகள்மீது செவி சாய்க்கமுடியும்.

செவிசாய்த்தல் என்பது ஒரு கலை. கற்றுக்கொள்ளவேண்டிய ஓர் அறிவியல். இதனைக் குழந்தைப் பருவம் முதலே மனிதனுக்கு மிக முக்கியமாகக் கற்றுக் கொடுக்க வேண்டியநுட்பம். ஏனெனில் செவிசாய்த்தலுக்குக் கடுமையான பயிற்சியும், நேர்மையான மனப்பாங்கும், உதவி செய்யவேண்டும் என்ற ஒப்பற்ற விருப்பமும் ஒருங்கினையவேண்டும்.

பெற்றோர்கள் தாம் எதைப் பார்க்க விரும்புகிறார்களோ அதைத்தான் பார்க்கிறார்கள். எதைக் கேட்க விரும்புகிறார்களோ அதையே கேட்கிறார்கள். உண்மையில் பிள்ளைகள் சொல்வதை அல்ல, மனிதனின் செவி ஒரு சக்தி வாய்ந்த வானொலிப்பொட்டி போன்றது. அற்புதமான இரண்டு ஒலி வாங்கிகள் அதில் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் அவன் தனது விருப்பத்துக்கு ஏற்ற ஒலியை உள்வாங்குகிறான். அவ்வாறே தனக்கு விருப்பமில்லாத ஒலிகள் அல்லது செய்திகளை தனது காதில் விழுத்தாது வசதியாக ஒதுக்கித் தள்ளி விடவும் கற்றுக்கொண்டுள்ளான். இதன் அடிப்படையிலேயே பெற்றோர்களும் தமது பிள்ளைகளது கருத்துகளைச் செவிசாய்க்காமல் தமது கொள்கைகளையும், நம்பிக்கைகளையும், தனது வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்களையும் மனதில் [illegible] கின்றனர். இது பிள்ளைகளின் தன்னிலை உணரும் திறன் விருத்தியை ஏற்படுத்தவோ, வாழ்வின் அர்த்தம் கண்டு செயற்படவோ, வாழ்வில் பொறுப்பேற்கவோ அந்தப் பிள்ளைகளுக்குச் சாதகமாக அமையாத ஒன்றாகவே இருக்கும்.

[தொடரும்...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தேசத்துக்கு உதவுவதே இந்தியாவின் பாதுகாப்பிற்கு பலம்

தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஜூனியர் விகடன் சஞ்சிகைக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தற்காலிக அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக அளித்த பேட்டி இங்கு பிரசுமாகிறது.

இருபது ரூபாவுக்கு ஒருவேளை உணவை வயிறாரச் சாப்பிடமுடியும் நம்முடைய தேசத்தில். ஆனால், இன்றைய நிலையில் அதே இருபது ரூபாவுக்கு ஒரு தீப்பெட்டி தான் வாங்கமுடியும், ஈழத்தில்! ஒரு கிலோ 100 ரூபா, ஒரு லீற்றர் பெற்றோல் 1,000 ரூபா, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 450 ரூபா...! பொருளாதாரத் தடையால் அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடிக்கொண்டிருக்கும் அந்த பாவப்பட்ட மக்களுக்கு அக்னிப் பரிசாகக் குண்டு மழைகளைப் பொழிந்து கொண்டிருக்கிறது சிங்கள இராணுவம்.

முன் எப்போதும் இல்லாத வகையில் உக்கிரமான தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்துக்கு ஆதரவாக இந்திய இராணுவத்தைச் சேர்ந்தவர்களும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற தகவல் பரவி, உலகெங்கும் இருக்கும் தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. இலங்கைத் தமிழர்களின் இப்படிப்பட்ட துரதிஷ்டமான நிலையைப் போக்குவதற்காக உலகெங்கும் உள்ள தமிழர்கள் குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

தமிழகத்தின் முக்கியமான அரசியல் கட்சிகள் எல்லாம் புலிகள் மேல் கொண்டிருந்த மனக்கசப்பால் ஈழத்தமிழர்களுக்கு ஒரு மித்த குரல் எழுப்பாமல் இருந்த சூழல் கூட இன்று மாறியிருக்கிறது. அ.தி.மு.க. முதற்கொண்டு அனைத்துக் கட்சிகளும் ஈழத்தமிழர்களுக்காக குரல் எழுப்பி வருகின்றன. தமிழ்த் திரையுலகம் ஒருமுகமாகத் திரண்டு சிங்கள அரசைக் கண்டித்து ராமேஸ்வரத்தில் பேரணிக்கு அழைப்பு விடுத்துள்ளது. இத்தகைய தார்மீக பலத்தால், 'புலிகளின் தாகம், தமிழீழத் தாயகம்' என்று இன அழிப்புக்கு எதிரான போரில் உக்கிரம் காட்டி வருகின்றனர் புலிகள்.

இலங்கையில் சிங்கள தேசத்துக்கு உதவுவதைவிட தமிழர் தேசத்துக்கு உதவுவதே இந்தியாவின் பாதுகாப்பிற்கு பலமாகும். எதிர்காலத்திலாவது உண்மையான நேச சக்திகளுக்கு இந்தியா உதவ முன்வரவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனிடம் ஜூனியர் விகடன் சில கேள்விகளை முன்வைத்தது.

கேள்வி: ''இலங்கையில் தற்போது என்னதான் நடக்கிறது. சிங்கள இராணுவத்தின் கை ஓங்கியிருப்பது போல செய்திகள் வருகிறதே''?

பதில்: ''இலங்கைத் தீவில் சிங்கள அரச படையினர், தமிழர் தாயகத்தின் மீது கொடுமையான யுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர். முப்படைகளின் உதவியோடு தமிழினத்தை அழித்தொழிக்க பெரியதோர் இன அழிப்புப் போரை கண்மூடித்தனமாக மேற்கொண்டு வருகின்றது சிங்கள அரசு. இந்த இன அழிப்புப்போருக்கு வெளி நாட்டு இராணுவ உதவிகளையும் பெற்று வருகின்றது.

சிங்கள அரச படைகளுக்கு இராணுவ உதவிகள் செய்துவரும் நாடுகள் தொடர்பாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்கு தெரியுமென நினைக்கின்றேன். இராணுவ நடவடிக்கைகள் மட்டுமல்ல, பாரிய பொருளாதாரத் தடையையும் தமிழர் தாயகத்தின் மீது ஏற்படுத்தி வருகின்றது.

தமிழ்மக்கள் தினமும் லட்சக்கணக்கில் தம்முடைய வாழ்விடங்களை விட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் மீது விமானக் குண்டு வீச்சுக்களையும் செல் வீச்சுக்களையும் சிங்கள அரச படைகள் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கண்மூடித்தனமான இந்தத் தாக்குதல்களினால் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும் காயமடைந்தும் வருகின்றனர். இவர்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைப்பது மிகவும் அரிதாகும். நாகரிக உலகில் கொடுமையானதொரு இன அழிப்புப் போரை ஈழத்தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.''

கே: ஸ்ரீலங்கா ஆளும் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினராக கருணா நியமிக்கப்பட்டிருக்கிறாரே?

ப: கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து எப்போது விலக்கப்பட்டாரோ, அன்றிலிருந்தே தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்டுள்ளார். கடுமையான இன அழிப்புப்போரை மேற்கொண்டு வரும் சிங்கள அரசு, வெளிநாடுகளை ஏமாற்றி இராணுவ உதவிகளைப் பெறுவதற்காக கருணா போன்ற துரோகிகளைக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றது. இவ்வாறானவர்கள், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக அரசினால் நியமிக்கப்பட்டாலும் மக்கள் அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

கே: கருணாவின் உதவியோடுதான் இப்போது ஸ்ரீலங்கா அரசு தேடித் தேடி தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கிறதா?

ப: ஸ்ரீலங்கா அரசானது கடந்த முப்பது வருடங்களாகவே தமிழ் மக்களுக்கெதிரான இன அழிப்புப் போரை மேற்கொண்டு வருகின்றது. எம்முடைய மக்களுக்கெதிரான யுத்தத்தில் கருணா போன்ற துரோகக் குழுக்களை பயன்படுத்தி வருவது, சிங்கள அரசின் தமிழர் விரோத இராணுவ வியூகங்களில் ஒன்றாகும். அந்தவகையில் இப்போது கருணாவையும் சிங்கள அரசு பயன்படுத்தி வருகின்றது.

கே: இப்போது நடக்கும் போர் புலிகளின் மீதான தாக்குதலா? இல்லை தமிழர்களை அழிக்கும் செயலா? தமிழர்கள் கொல்லப்பட்டால் அதுபற்றி செய்திகள் பெரிதாக வெளிவருவதில்லையே?

ப: சிங்கள அரசின் இன அழிப்பு நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்துக்கு தெரியவராமல் இருப்பதற்காகவே ஊடகங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு வர அனுமதிக்கப்படுவதில்லை. தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய விடயங்கள் அரசின் இன அழிப்பு யுத்த செய்திகள் வெளியே வராமல் தடுப்பதற்கேயாகும். கொழும்பு போன்ற நகரங்களில் உண்மைச் செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவதும், காணாமற்போவதும், கொலை செய்யப்படுவதும் சாதாரண விடயமாக மாறியுள்ளது.

கே: சிங்கள படைக்கு இந்தியாவில் இந்திய அரசின் உதவியோடு இராணுவ பயிற்சிகள் கொடுக்கப்படுகிறது என்று செய்திகள் வருவது எந்த வகையில் உண்மை?

ப: அண்மைக்காலமாக சிங்கள அரசுப் படைகளுக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சி வழங்குவது பற்றி ஊடகங்களினூடாக அறியமுடிகின்றது. இது எங்களுக்கு மிகுந்த வேதனையையும் கவலையையும் அளிக்கின்றது.

கே: சிங்களப் படைக்கு இந்திய இராணுவ பொறியாளர்கள் உதவுகிறார்கள் என்று தகவல்கள் வந்துகொண்டிருந்த நேரத்தில், சமீபத்தில் இலங்கையில் நடந்த தாக்குதலில் இந்திய இராணுவ பொறியாளர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கே: அண்மையில் சிங்கள விமானப் படையின் வவுனியாத்தளத்தில் ராடார் கருவியை இயக்குவதற்கும் பயிற்சி கொடுப்பதற்கும் இந்திய தொழில்நுட்ப வல்லுனர்கள் செயற்பட்டுவந்தமை முழு உலகிற்கும் தெரியவந்துள்ளது. இவ்வாறான பயிற்சிகளும் உதவிகளும்

ஜூனியர் விகடனுக்கு பா.நடேசன் பேட்டி

வெளிநாடுகள் எந்த நோக்கத்துக்காக வழங்கினாலும் ஸ்ரீலங்கா அரச படைகள் அதைத் தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்குப் பயன்படுத்தி வருகின்றமையே யதார்த்தமாகும்.

கே: சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு இராணுவ உதவிகள் செய்யத் தயாராக இருக்கிறது. அதனால், இந்தியாவுக்கு ஆபத்து என்பதால் உதவுகிறோம் என்று இந்தியா தரப்பில் சொல்லப்படுவது பற்றி..?

ப: எம்முடைய மனச்சாட்சி இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. வரலாற்று ரீதியாக இந்திய அரசு ஸ்ரீலங்காவிற்கு எவ்வாறான உதவிகளை வழங்கினாலும் அல்லது அழுத்தங்களை பிரயோகித்தாலும் இந்தியாவின் பூகோள நலனுக்கெதிராக ஸ்ரீலங்கா அரசு செயற்பட்டு வருகின்றது. தொடர்ந்தும், அவ்வாறே செயற்படுவார்கள் என்பதனை எம்மால் உறுதியாகக் கூறமுடியும்.

இந்திய அரசுக்கு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நெருக்கடிகள் ஏற்பட்டபோதெல்லாம் ஸ்ரீலங்கா அரசு இந்தியாவுக்கு எதிரான சக்திகளுடனேயே கூட்டுச் சேர்ந்ததுதான் கடந்தகால வரலாறாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களே இந்தியாவின் நலனிறகாக குரல்கொடுத்தும் செயற்பட்டும் வந்துள்ளமை வரலாற்று உண்மையாகும். இதை இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் ஆழமாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்பது எம்முடைய அவாவாகும். சிங்கள தேசத்திற்கு இந்திய அரசு உதவுவதைவிடத் தமிழர் தேசத்திற்கு உதவுவதே இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பலமாகும். எதிர்காலத்திலாவது உண்மையான நேச சக்திகளுக்கு உதவ முன்வரவேண்டும்.

கே: ஈழப் பிரச்சினைக்கு இந்தியா என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

ப: தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையினை நீக்கி எம்முடைய மக்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

கே: புலிகள் இயக்கத்தை மிக உக்கிரமாக எதிர்த்து வந்த காரணத்தால் ஈழத் தமிழர்களின் பரிதாப நிலை பற்றி குரல் கொடுக்காமல் இருந்த ஜெயலலிதா கூட இப்போது குரல் கொடுத்திருக்கிறாரே..?

ப: தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் அனைவருமே இன உணர்வு மிக்கவர்கள். அவர்கள் தமிழீழ மக்களுக்கு இன்னல்கள் ஏற்பட்ட போதெல்லாம் குரல் கொடுப்பதற்கு பின்னிற்க மாட்டார்கள். தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும்' என்பது போல அவர்கள் எல்லோரும் தற்போது அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் குரல் கொடுத்திருக்கின்றார்கள்.

கே: இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் ஸ்ரீலங்காவுக்கு ஆதரவான மனநிலையில் உள்ளார் என்று சொல்லப்படுவது குறித்து உங்கள் கருத்து என்ன..?

ப: இது நாராயணன் அவர்களிடமே கேட்கப்பட வேண்டிய விடயமாகும்.

கே: இலங்கை பிரச்சினைக்காக எங்கள் ஆட்சி யையும் இழக்க தயார்' என்று கருணாநிதி பேசி இருக்கிறார். மத்திய அரசுக்கு தந்திகள் அனுப்பச் சொல்லியிருக்கிறாரே..?

ப: தமிழ் இன உணர்வோடு எம்முடைய மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்திருக்கிறார். வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் நாம் நெருக்கடியை எதிர்கொண்ட காலங்களில் எல்லாம் எம்முடைய மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதற்கு தமிழக முதல்வர் அவர்கள் ஒருபோதும் தவறுவதில்லை. கடல் கடந்திருந்தாலும் அவர்கள் எல்லோரும் எம்முடைய உடன்பிறப்புக்களே. ஈழத்தில் தமிழ் மக்கள் துன்பப்படும்போது அவர்களால் அதனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்பது யதார்த்தமாகும்.

கே: ஸ்ரீலங்கா விமானப் படைத்தாக்குதல் காரணமாகப் பதுங்கு குழிகளில் மறைந்தபடி பிரபாகரன் நீண்டகாலம் உயிர் வாழ முடியாது - என்று ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சொல்லி இருக்கிறாரே..?

ப: இது அவருடைய பகற்கனவாகும்.

கே: புலிகளின் தலைமையிடமான கிளிநொச்சியை ஸ்ரீலங்கா இராணுவம் சுற்றி வளைத்துவிட்டது என்று செய்திகள் வருவது பற்றி?

ப: புலிகள் எவ்வாறான சுற்றிவளைப்புக்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்வார்கள்.

கே: பொருளாதாரத் தடைகள் இப்போதும் நீடித்துக்கொண்டுதான் இருக்கிறதா..? அத்தியாவசிய பொருள்கள் விலை, வாங்கும் அளவுக்கு இல்லை என்பது உண்மையா?

ப: பொருளாதாரத் தடைகள் தொடர்ச்சியாக நீடித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

கே: புலிகள் செயற்படமுடியாத அளவுக்கு முடங்கிவிட்டதாக ஸ்ரீலங்கா கொக்கரிக்கின்றதே?

ப: உலகத் தமிழ் மக்களின் ஆதரவு எமக்கிருக்கும் வரை சிங்கள தேசம் எம்மை வெற்றிகொள்ளமுடியாது. ■

இலங்கை இராணுவத்திற்கு கடந்த 10ஆம் திகதி 59 வருடங்கள் நிறைவடைந்தது. இதனை முன்னிட்டு யாழ்.பாதுகாப்புப் படைத்தளபதியின் ஆலோசனையின் பேரில் 51ஆவது படைத்தலைமையகம் யாழ்.பிரதேசத்தில் பல நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் 511, 512, 513 ஆகிய படைப் பிரிவுகள் மற்றும் யாழ்.நகர பாதுகாப்புப் படைப்பிரிவு ஆகியவற்றில் கடமைபுரியும் இராணுவ வீரர்களினதும் பிரதேச மக்களினதும் ஒத்துழைப்புடன் கூடிய முயற்சியில் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மற்றும் வலுவிழந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 10 குடும்பங்களுக்கு 10 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் இரண்டை மேலுள்ள படங்களில் காணலாம். அந்த வீடுகளின் முன்னைய தோற்றங்கள் படங்களின் கீழ்வரை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து புலித்தடையை இந்தியா நீக்க வேண்டும்!

கூட்டமைப்பு, ம.ம.முன்னணி, மேலக மக்கள் முன்னணி வலியுறுத்து

கொழும்பு, ஒக்.16

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடு: அந்த அடிப்படையில் மக்கள் கருத்துக்கணிப்புக்கு இந்திய அரசு மதிப்புக் கொடுத்து இனப்பிரச்சினையில் தலையிட வேண்டும் என்று இந்தத் தமிழ்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்தியாவில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு 51 வீதமான இந்திய மக்கள் ஆதரவு என 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிட்டபோதே தமிழ்க்கட்சிகள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. துரைரெட்ணசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரி.அரியநேத்திரன், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரதி அமைச்சருமான பெ. இராதாகிருஷ்ணன், மேலக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கலாநிதி என்.குமரகுருபரன் ஆகியோரே மேற்கண்டவாறு இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தெரிவிக்கையில்-

ஈழத்தமிழருக்கு இந்திய மக்களின் ஆதரவு உண்டு என்பதை அந்தக் கருத்துக் கணிப்பு காட்டியுள்ளது. ஆகவே இந்திய அரசு மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிக்கையில்-

இந்திய அரசு புலிகள் மீதான தடையை நீக்குமானால் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பை மஹிந்த அரசு உடனடியாக நிறுத்தும் என்றார். ''ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்பதற்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை சிறந்த உதாரணம் ஒன்றை வெளிகாட்டியுள்ளது. ஆகவே கௌரவப் பிரச்சினைகள் எதுவும் இன்றி இந்தியா, போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்'' -என்றார்.

பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிக்கையில்-

இந்தியா புலிகள் மீதான தடையை நீக்குமாக இருந்தால் அதனை நாங்கள் வரவேற்போம். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியாவுக்கே கூடுதல் உரிமை உண்டு என்றார். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களுக்குத் தீர்வு காணும் வகையில் இந்தியா புலிகள் மீதான தடையை நீக்கி யுத்தத்தையும் உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று கூறினார்.

மேலக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கலாநிதி குமரகுருபரன் தெரிவிக்கையில்,

இந்திய அரசு என்பது இந்திய மக்கள் தான். எனவே 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் கருத்துக்கணிப்புக்கு மதிப்புக் கொடுத்து மக்களின் விருப்பத்தை இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும் என்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும் என்பதில் புலிகள் உட்பட சகல தமிழ் மக்களும் விரும்புகின்றனர். இந்தியா பெரிய ஜனநாயக நாடு என்ற வகையில் உடனடியாக புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்'' எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

(சி)

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் கந்தையா இராசேந்திரம்

வெடியரசன் வீதி, காரைநகரைச் சேர்ந்த அமரர் கந்தையா இராசேந்திரம் அவர்கள் (16.09.2008)இல் சிவபதம் எய்தியபோது, அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்தோருக்கும், மற்றும் பலவழிகளில் எம்முடன் துணைநின்று உதவி புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (16.10.2008)இல் எமது இல்லத்தில் நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பு உள்ளங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வெடியரசன் வீதி,
காரைநகர். (79247)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வடமராட்சி விவசாயிகள் பயிரிடுதலில் ஆர்வம்

வடமராட்சி, ஒக்.16

வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக இலேசான மழை பெய்து வருவதையடுத்து விவசாயிகள் பயிர்ச் செய்கைக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் நெல் விதைப்புக்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

புகையிலைச் செய்கையாளர்கள் புகையிலையை நடுவதற்காகத் தோட்டத்தைக் கொத்திப் பண்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

(203-236)

பொதுக் கூட்டம்

அச்சுவேலி, ஒக்.16

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் கல்லூரி அதிபர் அருட் சகோதரி மேரி றெசாறியோ தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

பொதுக் கூட்டத்தில் யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்து கொள்வார்.

(203-11)

மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.08.2007 இற்கு முன்பு அடகு வைத்து இது வரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தொடர் இல.	கிளை	ஏலம் விடப்படும் திகதி	இடம்
01	யாழ். பிரதான வீதி - 104		
02	சேவைநிலையம், உரும்பிராய்		
03	சாவகச்சேரி -110		
04	சேவை நிலையம், கொடிகாமம்		
05	யாழ். பல்கலைக்கழகம் - 162		
06	சேவைநிலையம், திருநெல்வேலி	2008.12.06	மக்கள் வங்கி, யாழ்/கன்னாதிட்டி - 284
07	யாழ். கன்னாதிட்டி - 284	2008.12.07	
08	சேவைநிலையம், இணுவில்	2008.12.13	
09	யாழ்.ஸ்ரான்லி வீதி - 030	2008.12.14	
10	சேவைநிலையம், மானிப்பாய்	2008.12.15	
11	காங்கேசன்துறை - 031	&	
12	சேவைநிலையம், மல்லாகம்	2008.12.16	
13	அச்சுவேலி - 107		
14	சங்கானை - 108		
15	சுன்னாகம் - 109		
16	வல்வெட்டித்துறை - 141		
17	நெல்லியடி - 106		
18	பருத்தித்துறை - 285		

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்
வடலையம்.

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/555442)

மலிவு அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மலிவு
தீபாவளியை முன்னிட்டு சகல
துணி வகைகளும் மிகக் குறைந்த விலையில், சகல றெடிமேட் ஆடைகளும் மேலதிக விசேட கழிவுடனும் பெற்றுக்கொள்ள,
27.09.2008 தொடக்கம் 27.10.2008 வரை விரையுங்கள்.
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

கண்ணீர் அஞ்சலி

எமது பாட சாலையின் மதிப்பிற்குரிய அதிபர்
அமரர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி
அவர்களின் திடீர் மறைவு எமது சமூகத்திற்கு பேரிழப்பாகும். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்திக்காக இறைஞ்சி நிற்கின்றோம்.

பங்குத் தந்தையும் பங்கு மக்களும்.

புனித சவேரியார் ஆலயம், பக்கோட்டை.

(சி/555452)

கண்ணீர் அஞ்சலி

பண்பால் உயர்ந்த!
எமது பாடசாலையின் மாண்புமிகு அதிபரும் எமது சக ஆசிரியை
திருமதி ஞானச்செல்வி விநாயகமூர்த்தி அவர்களின் கணவருமான
வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி
அவர்களது திடீர் இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/அல்வாய் வடக்கு
றோ.க.த.க.பாடசாலை.

ஆசிரியர், மாணவர்கள், பாடசாலை [illegible]கம்.

(சி/555453)

துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை பழைய மாணவர் சங்க பொருளாளர்
திரு.சவரிமுத்து லூயிஸ் அன்ரன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி
சவரி முத்து மேரி மாகிறேற்
மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் [illegible]கம்.
யா/இளவாலை றோ.க.த.ஆண்கள் பாடசாலை.

(79258)

மரண அறிவித்தல்கள்

திருமதி தம்பிப்பிள்ளை (சீனியர்) செல்லாச்சி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உடுவில் செபமாலை மாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது அளவெட்டியில் வசித்துவந்தவருமாகிய தம்பிப்பிள்ளை (சீனியர்) செல்லாச்சி (15.10.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.10.2008) வியாழக்கிழமை இன்று மு.ப.10 மணியளவில் கலைநகர், அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்னும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர்,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (79252)

தகவல்:
ரவீந்திரன் (மகன்),
சி.கனிஸ்ரலா (பேத்தி).

திருமதி விமலாம்பிகை சோமசுந்தரம்

பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாம்பிகை சோமசுந்தரம் (14.10.2008) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் சோமசுந்தரத்தின் அன்புத் துணைவியும் பரராஜசிங்கம் (லண்டன்), அழகராணி, சோதிலிங்கம் (கனடா), இந்திராணி (கொழும்பு), காலஞ்சென்ற செல்வராணி மற்றும் ராஜி (லண்டன்), தர்மி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் கமலாதேவி, பரமானந்தம் (ஓய்வூதியர், அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்) கலா விஸ்வலிங்கம், காங்கேயன், சுதாகரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு மொறட்டுவையில் (18.10.2008) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

B 2 1/12, மொறட்டுவை,
கொழும்பு.
கொழும்பு: T.P: 0112638766, 0114986811
யாழ்ப்பாணம்: T.P: 0776176668.

தகவல்:
பரமானந்தம் (மருமகன்),
அழகராணி (மகன்).

(79254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கை விட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷ் இராணுவத்துக்கு உத்தரவு

பக்தாத்,ஒக்.16

"பிரிட்டிஷ் இராணுவம் அரசுக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈராக்கில் ஈடுபட்டு வந்துள்ளது. எனவே அதன் சேவை இனி ஈராக்கிற்குத் தேவையில்லை. அந்த இராணுவம் நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டும்" என ஈராக்கிய பிரதமர் அல் மாலிகி, அறிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் இராணுவம் பஸ்ரா நகரில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டது. அப்பகுதியின் பாதுகாப்புப் பொறுப்பையும் ஏற்றிருந்தது. எனினும் அது ஷியா தீவிரவாதிகளின் அல்மக்தி இராணுவத்துடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டு அரசுக்கு விரோதமாக செயல்பட்டு வந்துள்ளது என்றும் அவர் சாடியுள்ளார்.

தீவிரவாதிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்ட இந்த இராணுவம், அதற்கிணங்க நகரை விட்டும் வெளியேறியுள்ளது. இதன் மூலம் பஸ்ரா மக்கள் தீவிரவாதிகளின் தயவில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்தை இந்த இராணுவம் ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பஸ்ரா நகரை விட்டு,பிரிட்டிஷ் இராணுவம் வெளியேறியதும் ஷியா தீவிரவாதிகள் தங்களுக்கு எதிரானவர்களை பழிவாங்கியுள்ளார்கள். பெண்களினதும், குழந்தைகளினதும் தொண்டையை ஈவு இரக்கமின்றி அறுத்துள்ளார்கள் என்றும் பிரதமர் அல் மாலிகி சீற்றமடைந்துள்ளார்.

சேவை தேவையில்லை என்கிறார் பிரதமர் அல்மாலிகி

பிரிட்டிஷ் இராணுவத்தின் சேவை இனி எங்களுக்குத் தேவை இல்லை. அது வெளியேறிவிட வேண்டும். அதேவேளை அந்த இராணுவம் ஆற்றிய இதர பணிகளுக்காக, நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அதேவேளை சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க அதனுடைய சேவை இங்கு தேவைப்படாது என்றும் அவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வேளை இராணுவத்துக்குப் பயிற்சி அளிப்பதற்குப் பிரிட்டிஷ் இராணுவத்தினர் சேவை தேவைப்படலாம். சில தொழில் நுட்பத் துறைகளில் அவர்களின் பங்களிப்பு தேவைப்படலாம். ஆனால் சண்டையிடுவதற்கு அவர்களின் சேவை தேவைப்படாது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்கிலாந்துடன் நட்பு ரீதியிலான நல்லுறவை மட்டுமே நான் எதிர்பார்க்கின்றேன். இங்கிலாந்து நிறுவனங்களுக்கு, ஈராக்கின் கதவு திறந்தே இருக்கும். அறிவியல், கல்வி ஆகிய துறைகளில் பிரிட்டிஷின் ஒத்துழைப்பு தேவை. தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் ஈடுபட இராணுவ உதவி தேவைப்படாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஈராக்கில் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுவரும் பிரிட்டிஷ் இராணுவத்தில் 4100 வீரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எண்ணிக்கையையும் அடுத்த ஆண்டு குறைக்க பிரதமர் திட்டமிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிதி நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு 25ஆயிரம் கோடி அமெ. டொலர்

நியூயோர்க்,ஒக்.16

அமெரிக்காவில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க 25 ஆயிரம் கோடி டொலரை வழங்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

நிதி நெருக்கடியால் தத்தளிக்கும் 9 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு இந்தத்தொகை அளிக்கப்படும். இதன் மூலம் வங்கிகள், நிதி நிறுவனங்களின் பங்குகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

கோல்ட்மேன் சாஷ் குழுமம், மோர்கன் ஸ்டான்லி, ஜேபி மோரன் சேஸ், கோ பாங் ஒப் அமெரிக்கா மற்றும் மெரில் லிஞ்ச், சிட்டி குழுமம், வால்ஸ் பார்கோ, கோ பாங் ஒப் நியூயோர், மெலன் அன்ட் ஸ்டீரீட் கோர்ப்பரேஷன் ஆகியவற்றுக்கு இந்த உதவித் தொகை அளிக்கப்படும்.

நிதி உதவி அளிப்பதோடு அதற்கு உரிய மதிப்பிலான உரிமப் பங்குகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

அமெரிக்க அரசின் இத்தகைய முடிவை பெரிய வங்கிகள் விரும்பவில்லை. இருப்பினும் நிதித்துறை செயலர் ஹென்றி போல்சனின் நெருக்குதலால் இதற்கு ஒப்புக் கொண்டன என அமெரிக்க நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவில் வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவை அனைத்தும் தனியார் துறை வசம் உள்ளன. இருப்பினும் நிதி நெருக்கடி ஏற்படத் தொடங்கியதிலிருந்தே அரசு கொஞ்சம் கொஞ்சமாக தனது கவனத்தை அதிகரித்து இறுதியில் உரிமப் பங்குகளைப் பெறும் அளவுக்கு தனது ஆதிக்கத்தை அதிகரித்துள்ளது என வங்கிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

இது தவிர, வங்கிகளில் சம பங்கு முதலீடுகளை மேற்கொள்ளவும் அரசு திட்டமிட்டுள்ளது என தெரியவந்துள்ளது. இது தவிர, சில கட்டுப்பாடுகளையும் அரசு விதிக்கும் எனத் தெரிகிறது.

இந்நிறுவனங்களில் உயர் பதவிகளில் இருப்பவர்களின் சம்பள வரம்பு நிர்ணயிக்கப்படும். அதேபோல உயர் பதவிகள் புதிதாக வழங்கப்பட மாட்டா என்றும் மேலும் வருமான வரி வரம்பும் நிர்ணயிக்கப்படும் என்றும் தெரியவந்துள்ளது.

அத்துடன் இவற்றில் வெளிநாட்டு முதலீட்டு வரம்பும் நிர்ணயிக்கப்படும். கடன் வழங்குவதற்கான உச்ச வரம்பும் வரையறுக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மூன்று இலங்கையருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு

துபாய்,ஒக்.16

ஐக்கிய அரபு எமிரேட்டிலுள்ள ஜெட்டா நகரில் யேமன் நாட்டைச்சேர்ந்த ஓமர் எஸ்லாம் என்பவரை படுகொலை செய்துவிட்டு, அவரிடமிருந்த பணத்தைக் கொள்ளையிட்ட மூன்று இலங்கையருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இப்படுகொலையிலும் கொள்ளையிலும் சம்பந்தப்பட்ட இதர எட்டுப் பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் ஐவர் இந்தியர்களாவர்.

ஜெட்டா நீதிமன்றம் இவர்களுக்கு இத் தண்டனைகளை அளித்து தீர்ப்பு வழங்கியது.

விளையாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி சீனாவில் வீழ்ச்சி

பீஜிங்,ஒக்.16

சீனாவில் விளையாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களில் சுமார் ஐம்பது சதவீத நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன என சீனாவின் அதிகாரப்புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

சீனாவின் உற்பத்தித்துறை அதிகாரி இது தொடர்பாக கூறுகையில், "கடந்த சில தசாப்தங்களாக காணப்படாத மிகக்கடினமான காலப்பகுதியை சீனாவின் விளையாட்டுப் பொருள்கள் துறை இப்போது சந்தித்துள்ளது.

"சீனாவின் நாணயப் பெறுமதி உயர்ந்திருப்பதும், அமெரிக்காவின் தேவைகள் குறைந்து கடுமையான தரக்கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படுவதும், வர்த்தக நிறுவனங்கள் நட்டமடைந்து மூடங்கியமைக்கு காரணங்களாகும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

கனடா தேர்தலில் மீண்டும் கன்சர்வேடிக் கட்சி வெற்றி

ஒட்டாவா,ஒக்.16

கனடா நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் அந்நாட்டுப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தலைமையிலான கன்சர்வேடிக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. எனினும் நாடாளுமன்றத்தில் தேவையான பெரும் பான்மையைவிட குறைவான இடங்களையே அக்கட்சி பெற்றுள்ளது.

மொத்தம் உள்ள 308 இடங்களுக்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் கன்சர்வேடிக் கட்சி 142 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாக கனடா தேர்தல் ஆணையம் தனது இணையதளத்தில் தெரிவித்துள்ளது.

உலகலாவிய அளவில் காணப்படும் பொருளாதார நெருக்கடி வேளையில் நடை



பெற்ற தேர்தலில் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பெரும்பான்மை பலம் இல்லாத போதிலும் அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளமையால் ஹார்ப்பர் தலைமையிலான கன்சர்வேடிக் கட்சி மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதியாகியுள்ளது.

மிகப் பெரிய வீடு அமைப்பதில் முன்னாள் பாக். ஜனாதிபதி ஆர்வம்

இஸ்லாமாபாத்,ஒக்.16

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், 5 ஏக்கர் நிலப்பரப்பில் பிரமாண்டமான வீடு ஒன்றைக்கட்டி வருகிறார். இந்த வீட்டில் டெனிஸ் மைதானம், நீச்சல் தடாகம் ஆகியனவும் உள்ளடங்குகின்றன. இதில் மிகப்பெரிய தோட்டம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முஷாரப் தற்போது பெரும் பாலானநேரங்களில் டெனிஸ் விளையாடுகிறார்;கோல்ப் விளையாடுகிறார்; முக்கிய பிரமுகர்களுடன் அளவளாவுகிறார்; யாருடன் உரையாடினாலும் நகைச்சுவை துணுக்குகளை அள்ளி வீசுகிறார்.

அரசியலை விட்டு ஒதுங்கியிருந்தாலும் அவருக்கு பல்வேறு நாடுகளிலிருந்தும் இராணுவ தளபதிகளும், அரசு அதிகாரிகளும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் உரை நிகழ்த்த வருமாறு அழைப்பு விடுத்து வருகிறார்கள்.

எனினும் முஷாரப் அந்த அழைப்புகளை நிராகரித்து வருகின்றார்.

பாக். ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம்

பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, நான்கு நாள்களுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு செவ்வாய்க்கிழமை, சீனாவின் தலைநகரான பீஜிங் சென்றார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் உத்தியோக பூர்வ வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். அவருடன் பாதுகாப்புத்துறை அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் உட்பட உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் சென்றுள்ளது.

இது தொடர்பாக 'நேஷன்' நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியில், சீனாவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ள பாகிஸ்தான் ஆர்வமாகவுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, தடையற்ற வர்த்தகம், விவசாயம், கனிம வளத்துறை ஆகியவற்றிலும் இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீஜிங் சென்றுள்ள சர்தாரி சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோவை சந்தித்துப் பேசுவார். பின்னர் சீனப் பிரதமர் வென் ஜியாபாவ், மற்றும் உயர் நிலைத் தலைவர்கள் ஆகியோருடனும் முக்கிய ஆலோசனை நடத்துவார் என இஸ்லாமாபாத் அரச வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே சீன உதவியுடன் பாகிஸ்தான் சாஸ்மா பகுதியில் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு மேலும் 2 அணுஉலைகளை அமைக்கப் பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்காக மேலும் பல புதிய அணு மின் நிலையங்களை அமைக்கவும் சீனாவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ளப் பாகிஸ்தான் விரும்புகிறது என இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இது விடயத்தில் சீன அரசு பாகிஸ்தானை ஏமாற்றிவிடாது என்ற நம்பிக்கை உண்டு என பாகிஸ்தான் அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. புதிதாகச் செயற்கைக் கோள் கட்டுப்பாட்டு மையம் ஒன்றை அமைக்கவும் சீனாவிடம் பாகிஸ்தான் ஏற்கனவே உதவி கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு வலியுறுத்தி

மத்திய அரசுக்கு வழங்கும் ஆதரவை தி.மு.க. உடன் வாபஸ் பெறவேண்டும்

கெடுவாக 14 நாள்கள் தேவையில்லை 14 நிமிடங்களே போதும் என்கிறது பா.ஜ.க.

சென்னை, ஒக்.16

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு வலியுறுத்தி, இந்திய அரசுக்கு அளித்துவரும் ஆதரவை தி.மு.கவும், அதன் கூட்டணிக் கட்சிகளும் உடனடியாக வாபஸ் பெறவேண்டும்.

- இவ்வாறு பாரதிய ஜனதாக் கட்சி தேசிய செயலாளர் சு.திருநாவுக்கரசர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசுக்கு 14 நாள்கள் கெடு தேவையில்லை என்றும், 14 நிமிடங்கள் போதும் என்றும் அவர் கூறினார்.

அப்பாவி ஈழத் தமிழர்கள் அரக்கத்தனமாக - காட்டுமிராண்டித்தனமாகப் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், இந்தப் பிரச்சினையில் மத்திய அரசை உடனடியாகத் தலையிட வலியுறுத்தியும் சென்னை மெமோரியல் ஹோல் முன்பாக தமிழக பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய சு.திருநாவுக்கரசர் கூறியதை வருமாறு-

இலங்கையில் ஈழத் தமிழர்கள் கண்மூடித்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படுவதை கண்டித்தும், ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

புலிகள் ஒழிப்பு என்ற பெயரில் இலங்கை சிங்கள இராணுவம் தமிழ் இனத்தையே அழித்து வருகிறது. இதற்கு இந்திய அரசும் துணை நிற்கிறது. உலக தமிழர்களுக்காக ஆட்சி செய்கிறோம் எனக் கூறும் கருணாநிதி, அண்டை நாட்டில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காமல் மத்திய அரசை அனுசரித்து போகிறார்.

ஈழத் தமிழர்களுடன் தொப்புள் கொடி உறவு கொண்டுள்ள தமிழக மக்களால் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இலங்கை இராணுவத்துக்கு இந்திய அரசு அளித்து வரும் இராணுவ உதவிகளை உடனடியாக நிறுத்தச் செய்ய வேண்டும்.

மீண்டும் இலங்கை போர் நிறுத்தம் செய்வதற்கு அந்நாட்டு அரசை வற்புறுத்தி இலங்கை பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண இந்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினையில் பிரதமருக்கு லட்சக்கணக்கான தந்தி அனுப்புவதில் எந்தப் பயனும் இல்லை. உடனடியாக இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு தலையிடாவிட்டால் தி.மு.கவும், அதன் கூட்டணி கட்சிகளும் இந்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறும் என்று ஒரு தந்தி அனுப்பினாலே போதும், பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு உடல் முழுவதும் தந்தி அடிக்க ஆரம்பித்து விடும்.

இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட 14 நாட்கள் அவகாசம் தேவையில்லை. 14 நிமிடங்களில் மத்திய அரசில் முதலமைச்சர் கருணாநிதியால் எதையும் சாதிக்க முடியும். இதற்கான முயற்சிகளை அவர் உடனடியாகத் தொடங்க வேண்டும் - என்றார்.

பின்னர் பா.ஜ.க. தலைவர்கள் ஆளுநர் மாளிகைக்குச் சென்று ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட வேண்டும் என்று வலியுறுத்திக் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். (ஒ)

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக சுதந்தீரத் தமிழீழம் மலர்வதே பரிகாரம்

பழ. நெடுமாறன் தெரிவிப்பு

ஈழத் தமிழர் பிரச்சினையை எடுத்து விளக்க தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி உடனடியாக புதுடில்லிக்குச் செல்ல வேண்டும் - என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் வலியுறுத்தினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அனைத்து கட்சிக் கூட்டத்தில் பழ.நெடுமாறன் பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசியவை வருமாறு-

ஈழத் தமிழர் பிரச்சினை தீர்வதற்கு சுதந்திரத் தமிழீழம் அமைவதுதான் பரிகாரம் என்பது எங்களின் நிலைப்பாடாகும். ஆனால் இலங்கையில் மிக நெருக்கடியான சூழ்நிலை நிலவும் இந்தக் காலக்கட்டத்தில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டும் என்று முதல்வரையும் சர்வ கட்சித் தலைவர்களையும் வேண்டிக் கொள்கிறேன்.

1. சிங்கள அரசுக்கு இராணுவ ரீதியான உதவிகள் செய்வதை இந்திய அரசு உடனே நிறுத்த வேண்டும்.

2. இலங்கைக்கு இந்தியா வழியாக கப்பல்கள், விமானங்கள் மூலம் ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுவதற்கு இந்திய அரசு தடை விதிக்க வேண்டும்.

3. தமிழக மீனவர்களை கடந்த 25 ஆண்டுகள் காலமாகத் தொடர்ந்து சுட்டுத்தள்ளும் சிங்களக் கடற்படை மீது எதிர் நடவடிக்கை எடுத்து நமது மீனவர்களைக் காப்பாற்றுவதற்குத் தவறிய இந்தியக் கடற்படைக்குக் கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

4. இலங்கையில் சிங்கள அரசின் பொருளாதாரத் தடையின் விளைவாக உணவு, மருந்து மற்றும் இன்றியமையாப் பொருள்கள் கிடைக்காமல் தவிக்கும் தமிழர்களுக்கு உடனடியாக உதவிப் பொருள்களை அனுப்புவதற்கு இந்திய அரசு முன்வர வேண்டும். ஏற்கனவே தமிழக மக்களிடம் நாங்கள் திரட்டிய ஒரு கோடி ரூபா பெறுமதியன உணவு மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்க செஞ்சிலுவைச் சங்கம் ஒப்புக் கொண்டும் இந்திய அரசு அனுமதித் தரவில்லை. தமிழக முதல்வரும் இவற்றை அனுப்ப அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இதன் விளைவாக ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் வீணாகிவிட்டன. ஆனால் இப் போது இங்குள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் 20 கோடி ரூபாவுக்கும் அதிகமானப் பொருள்களைத் திரட்டித் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். அதை ஈழத்தமிழர்களுக்கு அனுப்பி வைக்க தமிழக முதலமைச்சர் முன் வர வேண்டும்.

5. ஈழத் தமிழர்களை பட்டினிப் போட்டுக் கொல்லும் இலங்கைச் சிங்கள அரசுக்கு நமது கடும் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் தமிழகத்திலிருந்து தூத்துக்குடி மற்றும் பிற துறைமுகங்கள் வழியாக உணவுப் பொருள்களும் மற்றும் இன்றியமையாப் பண்டங்களும் அனுப்பப்படுவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

மேற்கண்ட 5 கோரிக்கைகளை உள்ளடக்கிய தீர்மானங்களை இக்கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் இதை நிறைவேற்ற இந்திய அரசு தவறுமானால் அதில் அங்கம் வகிக்கும் தமிழக அமைச்சர்கள் பதவி விலகுவார்கள் என எச்சரிக்க வேண்டும் - என்றார். (ஒ)

சர்வகட்சிக் கூட்டத்துக்கு வராதவர்கள் ஈழத் தமிழருக்கு எதிரானவர்கள் அல்லர்

கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஒக்.16

அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்கு சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என் மீதான அதிருப்தியின் காரணமாகத்தான் வரவில்லை. ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும், அவர்களைச் சிங்கள வெறியர்களுக்குக் களப்பலியாக்கக் கூடாது, அவர்கள் சிங்கள இராணுவத்திற்குப் பலியாகி மாண்டு மடியக் கூடாது என்பதில் எல்லோரையும் போலவே அவர்கள் ஒத்தக் கருத்து உடையவர்கள்.

எனவே, இந்தக் கூட்டத்திற்கு வராத காரணத்தால் அவர்களுக்கு ஈழத் தமிழர் பிரச்சினையில் உடன்பாடு இல்லை என்று சிங்கள வெறியர்கள் நினைத்து விடக்கூடாது.

- இவ்வாறு முதல்வர் கருணாநிதி ஆவேசமாகக் கூறினார்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் நமக்குள் சகோதர யுத்தம் வேண்டாம் என்றும் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கூட்டத்தின் இடையில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் பேசியவை வருமாறு -

யார் நம்மிடமிருந்து விலகிச் சென்றாலும் கூட ஈழத் தமிழர் பிரச்சினையிலே அவர்களையெல்லாம் அழைத்து வைத்து - இழுத்து வைத்து ஓரணியிலே அனைவரும் திரண்டெழுந்து இந்திய அரசை வலியுறுத்தி, நம்முடைய தமிழ் மக்களை இலங்கையிலே காப்பாற்றுகின்ற அந்த முயற்சியிலே வெற்றியடைவோம் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குள்ளே சகோதர யுத்தம் கூடாது என்பதை நான் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறேன். அத்தகைய சகோதர யுத்தத்தால் ஏற்பட்ட விளைவுகளையெல்லாம் நாம் நன்கறிந்திருக்கின்றோம்.

இந்திரா காந்தியால் கிடைத்த உதவிகளைக் கூட நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் அந்தச் சகோதர யுத்தம், நம்முடைய இலக்கினைப் பாழ்படுத்தி விட்டது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அம்மையார் இந்திரா காந்தி உலகத்தில் உள்ள பல அமைப்புகளின் சார்பாக தண்டனங்களையெல்லாம் கூட்டிப் பொருட்படுத்தாமல், நூறுக்கு மேற்பட்ட முகாம்களை இந்தியாவிலே விடுதலைப் புலிகளுக்கு அமைப்பதற்கும், அந்தப் போராளிகளுக்கு உதவிகளை வழங்குவதற்கும் அவர்கள் அன்றைக்கு ஆயத்தமாக இருந்தமை மாத்திரமல்லாமல், ஆதரவும் அளித்தார்கள். அப்படிப்பட்டவர்களுடைய உதவிகளைக் கூடப் பெற்று, அந்தப் போராட்டத்திலே நாம் வெற்றி பெற முடியாமல் போனதற்குக் காரணம், நம்மிடையே ஏற்பட்ட சகோதர யுத்தம்தான் என்பதை மறந்து விடக் கூடாது - என்றார்.

தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து உடனடியாக இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும்

பெரியார் திராவிடர் கழகம், பா.ம.க. வலியுறுத்தல்

போர் நிறுத்த ஒப்பந்த காலத்திலிருந்தமையைப் போல் தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும்.

- இவ்வாறு பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரனும் பா.ம.க. தலைவர் ஜி.கே. மணியும் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழக அரசு ஏற்பாடு செய்த அனைத்து கட்சிக் கூட்டத்தின் தீர்மானங்களை வரவேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்திருந்தனர்.

பெரியார் திராவிடர் கழகத்தின் அறிக்கை வருமாறு-

தமிழக அரசு கூட்டிய அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.'

தமிழக மக்களின் உணர்வை பிரதிபதிலிக்கும் வகையில் தமிழக முதல்வரும் அனைத்துக் கட்சியினரும் இம்முடிவை எடுத்திருக்கின்றனர்.

தமிழகத்தில் ஈழத் தமிழர் விடுதலைப் போருக்கான ஆதரவும் எழுச்சியும் நீறு பூத்த நெருப்பாக உள்ளது என்று நாங்கள் கூறிவந்தமை இப்போது உண்மையாகியிருக்கிறது. இலங்கையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மஹிந்த ராஜபக்ஷ அரசு தன்னிச்சையாக முறித்துக்கொண்டது.

2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டபோது எத்தகையதொரு நிலைமை இருந்ததோ அதேபோல் தற்போது தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்திருக்கும் இலங்கை இராணுவம் அங்கிருந்து முற்றாக வெளியேற வேண்டும்.

ஈழத் தமிழ் மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் நேரடியாக அவர்களைச் சென்றடைய வேண்டும்.

தமிழக அரசின் முன்முயற்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நல்ல- சிறந்த முடிவை, ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வரும் பெரியார் திராவிடர் கழகம் போன்ற இயக்கங்கள், தொடர்ந்து தமிழ் மக்களிடத்தில் இந்த உணர்வுகள் மங்கிவிடாமல் பாதுகாக்கும் கடமையைச் செய்யும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

பா.ம.க. தலைவர் மணியின் அறிக்கை வருமாறு-

தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழக அரசு ஏற்பாடு செய்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் முடிவுகளை வரவேற்கிறோம்.

தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவம் வெளியேற வேண்டும். இடம் பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் தங்கள் வாழ்விடங்களுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஒ)

கருணாநிதி ஆட்சி செய்யும் காலத்திலேயே தமிழீழம் மலரும் என்கிறார் வீரபாண்டியன்

சென்னை, ஒக்.16

முதல்வர் கருணாநிதி ஆட்சி செய்யும் காலத்திலேயே தமிழீழம் மலரும் நாளும் வந்துசேரும்.

- இவ்வாறு திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தாயக உறவுகளுக்காக அவர் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமானது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய தீர்மானம்.

தமிழக முதலமைச்சர் கூட்டிய அனைத்து கட்சிக்கூட்டத்தில் ஒரு அதிர்ச்சி தரத்தக்க - தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புத் தரத்தக்க ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

இன்னும் இரு வாரத்துக்குள் போர் நிறுத்தம் ஏற்படவில்லையென்றால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவார்கள் என்னும் தீர்மானம் வரலாற்றுச் சிறப்புடையதாக அமைந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்ட இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் விஜய டி.ராஜேந்தர், அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு வராதவர்கள் குறித்து கடுமையாக விமர்சனம் செய்தார். அவர்கள் தமிழர்களே இல்லை என்றார். ஈழ மக்களுக்குத் துரோகம் செய்கிறார்கள் - என்றார்.

உடனே இடைமறித்த முதல்வர் கலைஞர், அப்படிச் சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொண்டு மிக அரிய விளக்கம் ஒன்றையும் கொடுத்தார்.

அவர்கள் ஈழத் தமிழர்களுக்கு எதிர்ப்பாக இங்கு வராமல் இருக்கிறார்கள் என்று கருத வேண்டாம். எனக்கு எதிராகத்தான் வராமல் இருக்கிறார்கள். மற்றபடி அவர்கள் வெளியில் இருந்தாலும் நம்மைப் போலவே ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அவர்கள் எதிராக இருப்பதைப் போலக்காட்டுவது சிங்களவர்களுக்குத்தான் நன்மை பயக்கும் என்று விளக்கம் அளித்தபோது அவருடைய பெருந்தன்மையையும் ஈழத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து அவர் கொண்டுள்ள அக்கறையையும் அறிய முடிந்தது.

எனவே, முதல்வர் கலைஞர் ஆளும் காலத்திலேயே தமிழீழம் மலரும் நாளும் வந்து சேரும். இந்த நம்பிக்கை இப்போது பலருக்கும் ஆழமாக வேரூன்றி இருக்கிறது - என்றார் வீரபாண்டியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்வெட்டு நேரக் குறைப்பு: பரீட்சார்த்த செயல்முறை எதிர்பார்த்த முன்னேற்றத்தை தரவில்லை என்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம்,ஒக்.16

குடாநாட்டில் மின் விநியோகத்தை அரைமணி நேரம் குறைக்கும் பொருட்டு பரீட்சார்த்த விநியோகம் செயல்முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால், அந்த நடவடிக்கை பொது மக்களின் ஒத்துழைப்பின்மை காரணமாக எதிர் பார்க்கப்பட்ட முன்னேற்றத்தைத் தரவில்லை.

வடபிராந்திய மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

மின்சார விநியோகத்தை அரை மணி நேரம் குறைக்கும் சாத்தியம் குறித்து பரீட்சார்த்த விநியோகச் செயல்முறை மூலம் அவதானித்தோம். ஆயினும் எதிர்பார்க்கப் பட்டது போல இரண்டொரு நாள்களில் முடிவு எடுக்க முடியவில்லை. பரீட்சார்த்தச் செயல்முறையைத் தொடர்ந்து மேற் கொள்ளவிருக்கிறோம்.

யாழ். பட்டினச் சூழல் பிரதேசத்தில் முக்கிய மற்றும் அவசர சேவை நிறுவனங்கள் செயற்படுவதால் அந்தப் பிரதேசத்தில் அரை மணி நேரம் மட்டும் மின்தடை நடைமுறைப்படுத்தப்படும். ஏனைய பிரதேசங்களில் சமமாக மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

அந்தப் பகுதி மக்கள் வழங்கும் ஒத்துழைப்பைப் பொறுத்து மின்வெட்டு நேரம் ஒழுங்குபடுத்தப்படும்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் சமநேரத்தில் சுமார் 45 நிமிடம் முதல் 50 நிமிடம் வரை மின் விநியோகம் தடைப்படும் சாத்தியம் உண்டு - என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் நேற்றிரவு 2 மணி நேரம் மின்தடை நடைமுறையில் இருந்ததாக அப்பகுதி மக்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். (அ-1)

தமிழகத் தலைவர்கள் இலங்கைத் தமிழர் குறித்துப் பேசுவது ஒரு தேர்தல் நாடகமே!

இப்படிச்சொல்கிறார் கருணா எம்.பி.

''தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களுக்கு அங்கு தேர்தல் வரும்போதுதான் இலங்கைத் தமிழர்கள் குறித்து அக்கறை வரும்.இப்போது அங்கு நடைபெறுவதும் ஒரு தேர்தல் நாடகம்தான்.'' - என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருணா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் இப்போது இலங்கைத் தமிழர்களின் விவகாரம் தொடர்பாக எழுந்திருக்கின்ற சலசலப்பு அரசியல் நோக்கத் திற்காகவே இடம்பெறுவதாகத் தெரிகின் றது. ஏனெனில் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளைப் பொறுத்தவரை அங்கு தேர் தல் வரும்போதுதான் இலங்கைத் தமிழர் கள் குறித்து அவர்களுக்கு அக்கறை வரும். அனைத்து அரசியல்கட்சித்தமிழர்களும்இலங் கைத் தமிழர்கள் குறித்துப் பேசுவார்கள்.

இதுபோன்ற இப்போதும் சூழல் அங்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை அங்கு பூதாகர மாக்கப்பட்டுள்ளது- என்றார். (அ-சி)

வெள்ளவத்தையில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஒக். 16

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் இனந்தெரியாத நபர்கள் நேற்று மதியம் 1.30 மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில்ஒருவர்உயிரிழந்தார்.

மேகராசா (வயது - 32) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல் லப்பட்டவராவார். இவர் நகைக்கடை உரிமையாளர் ஆவார்.

விகாரை லேன் சந்திக்கருகில் வைத்து ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடத்தப் படவிருந்த சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள்தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர் வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளதாக வலயக்கல் விப்பணிப்பாளர் வ.செல்வாசா அறி வித்துள்ளார். (1)

சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவாகவெளியிடப்படும் நினைவு மலருக்கு ஆக்கம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.16

அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவாக அவரது பிறந்ததினமான அடுத்தாண்டு ஜனவரி மாதம் ஏழாம் திகதி மலர் ஒன்று வெளியிடப் படவுள்ளது. இதற் கென ஆக்கங்கள் கோரப் பட்டுள்ளன.

ஈழத்துப்பெண் அறிஞர்களின் கலை, இலக்கிய, கல்வி சமூகப் பணிகளை வெளிக் கொண்டுவரும் வரலாற்று ஆவணமாக இந்நூல் வெளி யிடப்படவுள்ளது.

இதற்கென தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலய தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் மலர் வெளியீட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட் டுள்ளது.

ஈழத்தின் ஆத்மீக வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, கலை இலக்கிய வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி ஆகியவற்றில் பெண்கள் காலந் தோறும் ஆற்றிய பணி களை எடுத்துக் கூறும் வரலாற்று ரீதியான கட்டுரைகளை இந்த மலருக் கென அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் னர் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு மலர்குழு தெரிவித்துள்ளது. (203-55)

இராணுவத்தளபதி சரத்பொன்சேகா அமெரிக்காவுக்குத் தனிப்பட்ட விஜயம்

கொழும்பு, ஒக்.16

இலங்கை இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா தனிப் பட்ட முறையில் பயணம் ஒன்றை மேற் கொண்டு இரு தினங்களுக்கு முன் அமெரிக்காவுக்குச் சென் றுள்ளார்.

இராணுவத்தளபதி அமெரிக்காவுக்குச் சென்றுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார பிரயாணத்துக்கான காரணத்தை வெளியிட வில்லை.

இராணுவத் தளபதி அமெரிக்காவுக் கான தமது 'கிறீன்கார்ட்' விசாவைப் புதுப்பித் துக் கொள்வதற்காகவே அங்கு சென்றுள் ளார் என விடயமறிந்த வட்டாரங் கள் தெரி விக்கின்றன.

அதேவேளை இந்த நாள்களில் நாட்டுக்கு வெளியில் இருப்பது அவருக்கு நல்லது என சோதிடர்கள் ஆலோசனை வழங்கி யிருப்பதும் ஒரு காரணம் என்றும் சொல்லப் படுகின்றது. (அ-சி)

இன்றைய ஆட்டங்கள்

வேலணை, ஒக்.16

வேலணை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக் கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன. இன்றைய ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

14 வயதுப் பிரிவு

* புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயம் எதிர் புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம்.
* வேலணை மத்திய கல்லூரி எதிர் நயினாதீவு கணேசா வித்தியாலயம்.

வேலணை மேற்கு நடராசா வித்தியாலயமும் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் இரண்டாம் சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள் ளன.

16 வயதுப் பிரிவு

* நயினாதீவு கணேசா வித்தியாலயம் எதிர் வேலணை மத்திய கல்லூரி
* புங்குடுதீவு மகாவித்தியாலயம் எதிர் வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம் .

இரண்டாம் சுற்றில் இருந்து நயினாதீவு மகாவித்தியாலயம் போட்டிக ளில் கலந்துகொள்ளவுள்ளது.

18 வயதுப் பிரிவு

* நயினாதீவு மகாவித்தியாலயம் எதிர் வேலணை மத்திய கல்லூரி
* புங்குடுதீவு மகா வித்தியாலயம் எதிர் புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தியாலயம்

வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம் இரண் டாம் சுற்றில் இருந்து விளையாடவுள்ளது.

* * *

வலி வடக்கு, ஒக்.16

தெல்லிப்பழைகல்விக்கோட்டப் பாடசாலை அணிகளின் 13, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

தெல்லிப்பழை மகாஜனக் கல் லூரி மைதானம்-

13 வயதுப் பிரிவு

* காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி (அரையிறுதி ஆட்டம்)

16 வயதுப் பிரிவு

* வசாவிளான் மத்திய மகாவித் தியாலயம் எதிர் வசாவிளான் குட்டிய புலம் மகாவித்தியாலயம்
* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானம்:

16 வயதுப் பிரிவு

* தெல்லிப்பழை யூனியன் கல் லூரி எதிர் மயிலிட்டி நோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
* தெல்லிப்பழை மகாஜனக கல்லூரி எதிர் தெல்லிப்பழை கட்டுவன் புலம் மகாவித்தியாலயம்

18 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டமும் இடம்பெற வுள்ளது. (203-86)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ். நகரமைய றோட்டறக்ட் கழகத் தின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வரும் பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பி.ப. 3 மணி - வேம்படி எதிர் கோப் பாய் கிறிஸ்தவக்கல்லூரி.
* பி.ப. 4 மணி - கோப்பாய் கிறிஸ்த வக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி. (1)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பிரதி அதிபரும், பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினருமான திருமதி இந்திராணி ஸ்ரீரங்கன் அவர்களின் அன்புச் சகோதரன்

வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(அதிபர், யா/அல்லாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை)

அவர்கள் மரணமடைந்தமையால், துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.

பழைய மாணவர் சங்கம்.

ஆசிரியர்களுக்கான விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 16

அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கு தேசிய ரீதியான தடகள, பெருவிளையாட்டு விழா விரைவில் கொழும்பில் நடத்தப்பட வுள்ளது.

விளையாட்டு விழாவில் பங்குபற்ற விரும்பும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் வலய விளையாட்டுப்பிரிவு முதன்மை ஆசிரிய ரிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமே காந்தன் அறிவித்துள்ளார். (1-207)

மரண அறிவித்தல்கள்

வே.விநாயகமூர்த்தி B.Sc., Dip. in Edu.M.Ed.

அல்வாய், திக்கத்தைச் சேர்ந்தவரும் ஆழியவளை C.C.T.M.S, யா/ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியரும். அல்வாய் வடக்கு, R.C.T.M.S பாடசாலையின் அதிபருமான திரு.வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி 14.10.2008 செவ்வாய்க்கிழமை மரணமானார்.

அன்னார் ஞானச்செல்வியின் (ஆசிரியை, அல்வாய் வடக்கு, R.C.T.M.S) அன்புக் கணவரும் சனந்தன், சிவோத்தமபூசணி, வித்தியபூசணி ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர்களான வேலுப்பிள்ளை- நாகபூசணியம்மா தம்பதிகளின் கனிஷ்ட மகனும் திருமதி இந்திராணி சிறீரங்கன்(பிரதி அதிபர், யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), அமரர் ஜீவராணி வேலுப்பிள்ளை ஆகியோரின் தம்பியும் கந்தஞானியார் (ஓய்வுபெற்ற உப தபாலதிபர்)-தங்கம் கந்தஞானியார் (ஓய்வுபெற்ற ஆசிரியை) தம்பதிகளின் மருமகனும் தங்கராசா J.P(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்), கணேசம்மா தம்பதியினரின் பெறாமகனும் திருமதி சுமதி இளங்கோ ஞானியார்ரின் (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) உடன் பிறவா சகோதரனும், சிறீரங்கன், பஞ்சாட்சரஞானியார் (கனடா), இளங்கோஞானியார் (வைத்திய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), திருமதி ஞானசுகந்தி செல்வராஜன், நடராசா சிவபாலதர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற செயலாளர், நகரசபை, பருத்தித்துறை), நடராசா சிதம்பரநடராசா (சுவிஸ்), திருமதி பிரபா ஜெயசங்கர், திருமதி திவாஹரி சுதர்சன், திருமதி றஜிதாஹரி நரேந்திரன், வை.இந்துஜன் ஆகியோரின் மைத்துனரும் செல்வலக்சுமி, சுபலக்சுமி, சௌமிய லக்சுமி ஆகியோரின்சிறிய தந்தையும் ஞானலக்சுமி, ஞானலாஹரி, ஞானலாவனி, ஞானமதூரி, கதிர் ஞானியார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10மணியளவில் அல்வாய் மேற்கு, திக்கத்தில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம்,இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: தங்கராசா(சிறிய தந்தை)

திக்கம், அல்வாய். Dr.இளங்கோஞானியார் (மைத்துனர்), க.சிறீரங்கன்(மைத்துனர்)

திருமதி பாக்கியம் இராசநாயகம்

வட்டு. கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த பாக்கியம் இராசநாயகம் 14.10.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு திருமதி விசுவலிங்கம் இரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு திருமதி செல்லத்துரை- அமராவதி ஆகியோரின் அன்பு மருமகளும், செல்லத்துரை (லண்டன்), நவரத்தினராசா, தனலட்சுமி, தமயந்தி ஆகியோரின் அன்புத்தாயாரும், தயாளினி(லண்டன்), அருட்செல்வி, சத்தியவாகீஸ்வரன்(ஓமான்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்மராசா (இளைப்பாறிய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற திருமதி சிவசுப்பிரமணியம், தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், துஷித்தா (லண்டன்), தனுஷா(லண்டன்), அரவிந்தன் (இந்தியா), சிவந்தன் (வயம்ப பல்கலைக்கழகம், குருநாகல்), சபேசன், ரவிகரன் அகியோரின் அன்புப் பேர்த்தியும் சரஸ்வதியின் வளர்ப்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில்16.10. 2008 வியாழக்கிழமை பி.ப 2மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

''இராஜஸ்தான்'' வட்டு.கிழக்கு, சித்தங்கேணி.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்

ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழகச் சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக்.16

இலங்கை இராணுவத்தினரால் ஈழத் தமிழர்கள் அரக்கத்தனமாக - காட்டு மிராண்டித்தனமாக - படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், இராணுவ உதவி செய்து வரும் இந்திய அரசைக் கண்டித்தும் சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பொலிஸாருக்கும், சட்டத்தரணிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதனால் சிறிது நேரம் பரபரப்பு - பதற்றம் ஏற்பட்டன.

இலங்கை இராணுவத்தினரால் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ஜி.மோகனகிருஷ்ணன் தலைமையில் நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் உயர்நீதிமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை இராணுவத்திற்கு உதவி செய்து வரும் இந்திய அரசைக் கண்டித்தும், இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய அரசு தலையிட வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகள் கோஷம் எழுப்பினர். பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் என்.எஸ்.சி.போஸ் வீதியில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் வந்த சட்டத்தரணிகள் மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையை பெற்றோல் ஊற்றிக் கொளுத்தி இலங்கை அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இதையறிந்த பாதுகாப்பில் ஈடுபட்டிருந்து பொலிஸார் உடனடியாகச் சென்று எரிந்து கொண்டிருந்த கொடும்பாவியை தண்ணீர் ஊற்றி அணைக்க முயற்சித்தனர். அதற்கு சட்டத்தரணிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் சட்டத்தரணிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு தள்ளு முள்ளு ஏற்பட்டது.

அதன் பின்னர் அந்தக் கொடும்பாவியைப் பொலிஸார் அணைத்தனர். இந்தப் போராட்டத்தில் திரைப்பட இயக்குநர் சீமான் கலந்து கொண்டார்.

உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் ராம சிவ சங்கர், அறிவழகன், முகவை ஆரோக்கியம், சிவ. ராஜசேகரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர்.

வவுனியாவில் வெடிகுண்டு மீட்பு

வவுனியா, வைரவபுளியங்குளம், குருமண்காடு பகுதியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனத்தின் வளாகத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் பொலிஸார் சுமார் ஒன்றரைக் கிலோ நிறையுடைய சி-4 ரக வெடிபொருள்களை மீட்டனர். வெடிபொருள்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா சென்ற இரு அம்புலன்ஸ்களைக் காணவில்லை

கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து வவுனியாவைத்தியசாலைக்குநோயாளர்களுடன் சென்ற இரண்டு அம்புலன்ஸ்கள் காணாமல் போயுள்ளன என வன்னித்தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டு அம்புன்ஸ்களிலும் 11 நோயா ளர்கள், புதுக்குடியிருப்பு செஞ்சிலு வைச் சர்வதேசக் குழுவின் அலுவலகம் வரை சென்றனர். அங்கிருந்து வவுனியா செல்ல செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் அனுமதி கிடைக்கவில்லை என்று தெரி விக்கப்படுகின்றது.

இந்த அம்புலன்ஸ்களில் எட்டு மாதங்களில் பிறந்த குழந்தை உட்படபல நோயாளர்கள் சென்றிருந்தனர்.

இந்நிலையில் அந்த அம்புலன்ஸ்களுக்கு ஏற்பட்ட கதி என்ன என்று தெரியவில்லை என்று கூறப்பட்டது.

ஒட்டுசுட்டான் பாலம் குண்டு வைத்து தகர்ப்பு

படையினரே செய்தனர் என புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 16

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியின் 9 ஆம் மைல்கல் அருகில் இருந்த பிரதான பாலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரால் குண்டுவைத்துத் தகர்க்கப் பட்டிருக்கின்றது என விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

மக்களின் போக்குவரத்து மற்றும் உணவு வாகனத் தொடரணி உட்பட சகல போக்குவரத்துக்கும் இப்பாலமே பயன்படுத்தபபட்டு வருகின்றது.

பேராறின் மீது உள்ள இந்தப் பாலத்தை முதலில் படையினரின் ஆழஊடுருவும்அணியினர் குண்டு வைத்து தகர்த்தனர்.

அதன் பின்னர் இலங்கை விமானப் படை ஜெற் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தியும் படையினர் ஆட்லறி ஷெல் தாக்குதலை நடத்தியும் சேதப்படுத்தியுள்ளனர்என்றுபுலிகள்தெரிவித்திருக்கின்றனர்.

இந்தியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவரது கொழும்பு இல்லத்தில் சந்தித்துப் பேசி னார்.

இந்தியாவின் புதிய துணைத் தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள விக்ரம் மிஸ்ரியை, எதிர்க்கட்சித் தலைவருக்கு அறிமுகப் படுத்தி வைப்பதற்காகவே அவருடன் எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்துக்கு இந்தியத் தூதர் நேற்று முற்பகல் சென்றார் என்று கூறப்பட்டது.

இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பவை வருமாறு:-

இந்திய மத்திய அரசு இலங்கை இனப் பிரச்சினையில் தலையிடாதுவிடில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிவிலக வேண்டும் என்று அனைத்துக் கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வெறும் நாடகமே. இதை ஏற்றுக்கொள்ள முடியா[illegible] விட்ட தவறுகளை மறைக்கத் தான் முதல்வர் கருணாநிதி இப்படி ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

தற்போது இலங்கையில் நடப்பது தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்திற்கு எதிரான ஒரு போர். எனவே, அது நிறுத்தப் படுவது விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுவதற்கான ஒரு முயற்சியே.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான இராணுவத்தாக்குதல்கள் நிறுத்தப் பட வேண்டும். அந்த நாட்டுக்கு இந்தியா அளிக்கும் ஆயுத உதவியும் நிறுத்தப்பட வேண்டும். இந்த முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை உருவாக்குவதற்கு கருணாநிதி முயற்சிக்க வில்லை.

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளாது. அவ் வாறு இந்தியா தலையிடுவது இந்தியாவை மற்றைய நாடுகள் தலையிடுவதற்கு வழிவகுக்கும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

எம்.பி.பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார் எனக் கையெழுத்திட்ட கடித மொன்றைத் தமிழக முதலமைச்சரிடம் கனி மொழி சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தக் கோரி இந்திய அரசுக்கு தமிழக முதலமைச்சர் இரு வார காலக்கெடு விதித்திருந்தார். தவறினால் மத்திய அரசிலிருந்து தி.மு.க. வெளியேறி விடும் என்ற எச்சரிக்கையும் விடப் பட்டிருந்தது.

இதனை மேலும் வலியுறுத்தும் வகையிலான ஓர் அடையாளமாகவே கனிமொழியின் இராஜிநாமா அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

வெளியுறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகள் மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

பிரதான எதிர்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் தெரிவித்ததாவது, இலங்கையில் தமிழ் மக்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையை இந்திய அரசு இலங்கை அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இலங்கையில் இடம்பெறும் யுத்தம் தொடர்பாகவும், தமிழ் மக்கள் இடம்பெயர்வது தொடர்பாகவும் இந்திய அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

இலங்கையின் ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டும். அங்கு அமைதி ஏற்பட வேண்டும். இதுவே பாரதீய ஜனதாக் கட்சியின் நிலைப்பாடாகும் - என்றார். (அ-1)

முல்லைத்தீவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10.50 மணியளவில் வட்டமிட்ட விமானங்கள் 8 குண்டுகளை வீசித்தள்ளின. இதனால், அங்குள்ள 7 மக்கள் குடிமனைகள் சேதமடைந்ததுடன், விவசாய நிலங்களும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. அத்துடன், முள்ளியவளையில் உள்ள இரு பிரதான வீதிகளும் சேதமடைந்துள்ளன என்று புலிகள் மேலும் குறிப்பிட்டிருக்கின்றனர்.

களுத்துறைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப நபர் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத் துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் என்றும் பத்து நாள்களுக்கு முன்னரே யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-78)

இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் சிறுபான்மையினரின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

இலங்கையில் நிலவும் சூழ்நிலை இந்திய அரசுக்கு மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

அங்கு அதிகரித்து வரும் மோதல்கள் குறித்தும் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்கள் அதிகரித்திருப்பதும் குறித்து இந்திய மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும் போது அவர்கள் துன்புறுத்தப் படுவது மற்றும் கொல்லப்படுவது குறித்தும் இந்தியா கவலை தெரிவித்துள்ளது -என்றார்.

இலங்கையில் இரண்டு வாரங்களுக்குள் போர் நிறுத்தத்தை கொண்டுவர இந்திய அரசு நடவடிக்கை எடுக்கா விட்டால் தமிழக எம்.பிக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாகப் பதவி விலகுவார்கள் என்று தமிழகத்தில் செவ்வாய்க் கிழமை மாலை தி.மு.க. தலைவரும் முதல்வருமான கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் இந்தியப் பிரதமர் இலங்கை நிலைமை குறித்து வெளியிட்ட முதலாவது கருத்து இது வாகும். (அ)

ம.தி.மு.கவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு இந்தியா அழுத்தம் தரத் தவறினால் மத்திய அரசில் இருந்து தமிழக அமைச்சர்களும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று வைகோ கேட்டுள்ளார்.

மறுமலர்ச்சி தி.மு.க. சார்பில் இருவர் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது தெரிந்ததே. (அ-1)

தமிழகத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - இந்திய உறவு தொடர்ந் தும் சுமுகமான நிலையில் செயற்படுத்தப் பட வேண்டும் எனில் இந்தியா மத்திய அரசு விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்திய மத்திய அரசிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தக் கூடிய எந்த ஒரு நடவடிக்கைகளிலும் இலங்கை அரசு ஈடுபடாது.

எனவே, தமிழகத்தில் இருந்து வரும் எவ்வித அழுத்தங்களாலும் எமது நாட்டில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட மாட்டாது - என்றார்.

ஈழத்தமிழருக்கு தீர்வுதருவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளே இவ்வாறு தெரிவித்துள்ளன.

தமிழகக் கட்சிகளின் தீர்மானம் தொடர்பாக ஜெனிவாவில் இருந்து கருத்து வெளியிட்டுள்ள கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவரும், திருகோணமலை மாவட்ட எம்.பியுமான இரா.சம்பந்தன், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஏதுவான முறையில் நீதியான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப் பது இந்தியாவின் தலையாய கடமை என்று கூறியுள்ளார்.

அதற்கு ஏதுவாக தமிழகக் கட்சிகளின் தீர்மானத்துக்கு மதிப்புக் கொடுத்து மத்திய அரசு செயற்படும் எனத் தாம் எதிர்பார்க்கிறார் எனவும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிடவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். இதுவரை காலமும் புலிகளுடன் ஏற்பட்ட முரண் பாட்டினால் வேறு நிலைப்பாட்டைக் கொண்டிருந்த சில தமிழகத்தின் பெரிய கட்சிகள் இன்று தமது கருத்தை மாற்றி ஈழத்தமிழர் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும் எனக் கோருகின்றமை பாராட்டுக்குரியது.

இலங்கை இராணுவத்துக்கு இந்தியா ஆயுத உதவிகளை வழங்கியதன் காரணத்தாலேதான் இன்று கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்தியாவின் ஆலோசனையை கேட்கவேண்டாம் என விமல் வீரவன்ஸ கூறுவது வேடிக்கையானது என்றார்.

அப்படியானால் இந்தியாவின் ஆயுத உதவிகளையும் விமல் வீரவன்ஸ வேண்டாம் என்று கூறுவாரா எனவும் மனோ கணேசன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினரும் பிரதியமைச்சருமான இராதாகிருஷ்ணன் தெரிவிக்கையில்,

இராணுவ உதவிகளை நிறுத்திவிட்டு நீதியான அரசியல் தீர்வு ஒன்றுக்கு உதவியளிக்க வேண்டும் என்ற வகையில் தமிழகக் கட்சிகள் எடுத்த தீர்மானமும் மத்திய அரசுக்குக் கொடுத்த காலக்கெடுவும் பாராட்டுக்குரியன.

இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பில் இந்திய மத்திய அரசு இலங்கை அரசுடன் கூடிய [illegible] வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ-சி)

மரண அறிவித்தல்

திருமதி சுப்பிரமணியம் யோகேஸ்வரி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் யோகேஸ்வரி நேற்று (15.10.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா- ரத்தினம்மா தம்பதியினரின் மூத்த மகளும் நடேசு சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் பாலேந்திரன்(பிரான்ஸ்), சுரேந்திரன்(ஜேர்மனி), ஜெயந்திரன்(லண்டன்), விஜிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாபரன்(உபதபாலகம், ஆனைக்கோட்டை), புஸ்பவதனி(பிரான்ஸ்), வனிதா(ஜேர்மனி), கிரிசாந்தினி(லண்டன்) ஆகியோரின் மாமியாரும் கீரன்(பிரான்ஸ்), தீரன்(பிரான்ஸ்), கனிமெழி(பிரான்ஸ்), சபிரினா(ஜேர்மனி), ஸ்பெல்(ஜேர்மனி), சாரா(ஜேர்மனி), லப்றா(ஜேர்மனி), கீரா (ஜேர்மனி), நடேஸ்(ஜேர்மனி), பிரியந்(லண்டன்), பகீரதி, தேனு ஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10. 2008) வியாழக்கிழமை பி.ப 2மணியளவில்அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கோண்டாவில். சுப்பிரமணியம் (கணவர்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சோலை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரி வினாத்தாள் - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Question Paper - 2008 December

T	
31	I

ஆங்கிலம்
English Language

ஒரு மணித்தியாலம்
One hour

Answer all Questions.

Test - 01

Read the following paragraph and fill in the blanks using the correct prepositions given in brackets.

The first one is done for you.

(to, about, for, at, in, of)

The cock crows (1) ....at..... 5. a.m. We can hear the whistle (2) ..... the train (3) .....

the silence of the morning. People get up (4) ..... the whistle of the train. My mother gets up at five o'clock, she takes (5) ..... twenty minutes for her (6) ..... prepare the food.

Test - 02

Complete the following dialogue using the words/phrases given in brackets. The first one is done for you.

Late already, ~~Where is~~ he?, He's around, Take off, Wondering too, Leave him behind

Raja :- Who else coming with us?
Mala :- Isn't Nimal coming with us?
Raja :- But (1) Where is he?
Mala :- I'm (2) .....
Raja :- We'll have to start without him!
Mala :- And (3) ..... Oh no, that won't be right wait a minute, There's his car (4) ..... Let's look for him.
Raja :- we' re (5) ..... and the Plane will (6)..... in no time.
Mala :- Let's hurry up.

Test - 03

Here Shanthi gives some instructions to visit her village. Complete the words with the correct letters. Write one letter for each blank. (-) The first one is done for you.

Hello Children! would you like to come to our village? you can come by (1) bus  on the way you can see colourful

(2) b ..... and (3) t .....

Get down at the bus stand near the (4) p .....

in the middle of the town. There is a (5) t ..... near the bus stand. And you can see a

(6) C ..... (7) m .....

la kovil also turn left at the kovil and go straight on you will come

to (8) p ..... I usually go there and play with

my (9) F ..... Turn right at

there and go straight on My (10) h .....
the first one on your right next to my place.
you can see a (11) h .....
come with your family.

Test - 04

Read the following advertisement and complete the table.

Certificate course in computer application. We will be starting this course specially for students and students who successfully complete the full course will be entitled to our ceritficate in computer programme. It will be a four - month course beginning from 1st of November 2008. The course willbe conducted on Tuesdays and Thursdays. 10.00 to 1.00 each day. The candidates will have to pay a total sum of Rs. 6500 at the beginning of the course. Send in your application before 10th October 2008 to. The Registrar, Computer Centre, No. 1, Orange Grove Place, Kandy.

For Whom	Duration	Class Days
e.g:- (1)Students successfully	(2)	(3) .....
Commencement	Course fee	Closing date
(4)	(5).....	(6) .....

Test - 05

Write a description on one of the following.

1) My pet. 2)My English Teacher. 3)My grand mother.

.....
.....
.....
.....
.....
.....

Test - 06

Write 5 sentences about the picture given below.

.....
.....
.....
.....
.....

Test - 07

Read the following passage and answer the questions given below.

John was very happy when he received his examination results. He had done very well. His father had promised him, that if he managed to get good grades, he would take him to Disneyland for the holidays.

A week before June holidays, he was very excited He would be leaving for America with his parents on the first day of the holidays.

When the day finally came he felt very nervous. It was the first time he would be flying. After the aeroplane tookoff, he talked non - stop. He had many questions to ask his parents.

1) Why was John very happy?
.....
2) What had his father promised him?
.....
3) When was he very much excited?
.....
4) With whom was he travelling to America?
.....
5) When were they leaving?
.....

Test - 08

You are the secretary of your school Interact club. You have invited Lion Dr. Ranjith Cooray to a talk on The Lions club and its services. Write a notice to be put on the notice board, informing the students about it. Give the date, time and venue. [use about 75 words]

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

English Language - II

Two hours

Answer all Questions.

Test - 09

Underline the most suitable word that fills the blank. The first one is done for you.

Man made robots to do (1) ..... jobs (easy, simple, difficult). We need robots when we find our work (2) ..... (interesting, boring, easy). Robots can also help us to find the job (3) ..... (safe, natural, dangerous). Robots have (4) ..... (artificial, natural, dull) intelligence. We can finish the work (5) ..... (slowly, quickly, badly) with a robot. Robots never get (6) .....(bored, tired, difficult)

Test -10

Read the following programme and answer the questions given below.

School Nature Clubs
Annual meeting programme 15 - 08 - 2008

9.00 a.m.	Religious observances
9.10 a.m.	Lighting the traditional Oil Lamp
9.30 a.m.	Welcome speech by Mr. Kamesh, President of Maduma Bandara.
9.45 a.m.	Welcome song by students of Grade 10
10.00 a.m.	Tea break
10.15 a.m.	Presentation of progress reports (work done by each club)
12.00 noon	Preparation for the future plans. Listing activities (Mrs. H. Jayasegara)
1.00 - 1.30 p.m.	Lunch break.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1.30 - 2.00 p.m.	Drama by students of Maduma Bandara. "We love nature"
3.00 p.m.	Prize giving
3.30 p.m.	Vote of thanks, secretary of Maduma Bandara
4.00 p.m.	Planting trees in the school surrounding
6.00 p.m.	End of the programme.

1) Who will say "It's a pleasure to see such a large gathering today"?
.....
2) Which item tells us what the nature club did in presentation of progress reports [work done by each club]
.....
3) What will they do after the vote of thanks?
.....
4) What programme will be performed by grade 10 students?
.....
5) What's the name of the drama to be performed by school children?
.....

Test - 11

Match the questions with the answers. Write the number of the question in the correct bracktes. The first one is done for you?

01) Why do you go to Library?
02) Who took that photograph?
03) Why did he take it?
04) Where is it now?
05) What's it's title?
06) How much did he win for the photograph?
07) Who is in it?
08) How dose he look?
09) What feeling does it arouse?
10) What do you think he is doing?
11) Who do you think he is with?

01)	In the Library	[ ]
02)	Rupees 2000/-	[ ]
03)	Kanishka's friend	[ ]
04)	To see the Exhibition	[1]
05)	Because it is his hobby	[ ]
06)	A Child	[ ]
07)	Affection	[ ]
08)	He is unhappy	[ ]
09)	May be with his grandma	[ ]
10)	Sympathy and sorrow	[ ]
11)	He's Kissing his poor old and week grandma	[ ]

Test - 12

Complete the paragraph using "their" or "there" in the blanks.

Some of the scouts from the camp took (1) ..... bags and went to the Sunday fair. It was early morning but already many people had gathered (2) ..... The villagers came with heavy bags on (3) ..... heads. These were full of (4) ..... own garden produce. The boys bought (5) ..... vegetables for the day. (6) ..... bags were now full and heavy. They did not want to stay (7) ..... any longer. So they took (8) ..... bags and walked down the camp. And they kept (9) ..... bags (10) ..... Then they started to cook.

Test - 13

Write on one of the following. Use about 100 words.

a) Sources of knowledge
b) A religious festival
c) A film you have watched

.....
.....
.....
.....
.....
.....
.....
.....

Test - 14

Write a letter to the Editor Ceylon Daily News to say that you are worried about the misuse of water taps by the public Explain how water is wasted and advise the public not to waste water.

.....
.....
.....
.....

Test - 15

Read the following text and answer the questions given below.

Out of the people I have met, the person I am going to write about is definitely the most interesting. Her name is Uvini Fernando and she is in my class. I should mention that she is comple- tely and utterly insane.

The reasons that made me think of this unusual yet truthful description are these. She really does believe that earth will be dominated by aliens some day. She practically worships rock music, and she's more to the wild side than I am. One rainy day she went out to wander about the school. She looked like a Veddah when she came back.

Her drawing is surprisingly good and her water bottle itself is a work of art. Uvini's trademark changes from month to month. Her current trademark is a face with a raised eyebrow, with a 2 on the side. Don't ask me what that means, I have no idea.

Uvini has extremely surprising ideas, most of them completely mad. Her idea of shopping is to buy completely useless things. These ideas helped me to decide on one of the most interesting people I have met, Uvini Fernando.

1) What is the name of the interesting person mentioned in the text?
.....
2) What dose she believe in?
.....
3) According to the text what is her hobby?
.....
4) On that rainy day how did she look like?
.....
5) What is her current trademark?
i) .....
ii) .....
6) Write to what the following underlined words refer in the text?
a) She in paragraph 1
.....
b) That in paragraph 2
.....
c) That in paragraph 3
.....
d) Then in paragraph 4
.....
7) Find words from paragraphs that have a similar meaning to the following.
a) Surely .....
b) Trust .....
c) Present .....
d) Astnoishing .....

Test - 16

Write on one of the following. Use about 200 words.

a) Write an article on, advantages and disadvantages of mobile phones.
b) Complete the following story. Last sunday when I was resting in my bed I heard some one crying.
So I .....
c) The uses of rainforests
* Location of rainforests
* Where do we find?
* How do we get benefits?
* How do we protect them?
d) Yala National Park.
* Location
* Climate
* animals, birds
* Tourists visit

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org